
# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

ஒகஸ்ட்.21 - ஒகஸ்ட்.27, 2013 பக்கம் - 24 30/-


## சிங்கக் கொடியுடன் சீன மீனவர்கள்

பேசாம இருக்க வேண்டியது தானே எங்கட தலைவிதி. ஏற்கனவே கஷ்டம். ந்த வித உதவியும் இல்லாம கஷ்டப்படுறம்.



## தலைவா

### தடையின் மர்மம்




1717 FOLLOW US www.mobitel.lk

சிறப்புமிகு ரம்ழான் மாதத்தில்
சிறப்புமிகு IDD கட்டணங்கள்

குறித்த கட்டணங்கள் IDD Buddy
விஷேட அழைப்பு முறை கொண்டது.

| | | | |
|---|---|---|---|
| பஹ்ரெய்ன் | ரு. 4.00 | ஓமான் | ரு. 12.00 |
| சைப்ரஸ் | ரு. 1.00 | கட்டார் | ரு. 15.00 |
| யோர்தான் | ரு. 9.00 | சவூதி அரேபியா | ரு. 8.00 |
| குவைட் | ரு. 6.00 | | |
| [illegible] | ரு. 9.00 | ஐக். அரபு இராஜ்ஜியம் | ரு. 12.00 |

20

Sri Lanka Telecom Mobitel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுஸ்திரேலியாவிலிருந்து மட்டும் இறக்குமதி செய்யப்படும் முழு ஆடை

# மலிபன் பால் மா

## DCD அற்றது என

- அவுஸ்திரேலியாவின் அரச விவசாய, மீன்பிடி மற்றும் வனவள திணைக்களம்,
- டெய்ரி அவுஸ்திரேலிய நிறுவனம்,
- மரே கோல்பன் கோபரேடிவ் நிறுவனம்
- சிங்கப்பூர் ரோமர் இரசாயனகூடம்,

அத்தாட்சிப்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் விசேட பால் - இலங்கையின் விசேட நாமத்தில்...

Maliban பால்

**மலிபன் மில்க் புரடக்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**

389, காலி வீதி, இரத்மலானை.

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்:

**தேஜா குணவர்தண**

தரக்கட்டுப்பாட்டு முகாமையாளர்

தொ.பேசி: 011 5632189

போசாக்கு நிறைந்த மலிபன் பால் - அவுஸ்திரேலியாவிலிருந்து மட்டுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ஹரிஸ்

# மெல்லக் கொல்லும் சினிமா

## அஜித் படத்துக்காக உயிரை விட்ட யாழ். மாணவி

தென்னிந்தியத் திரைப்படங்களில் காட்டப்படும் போலித் திரைகளுக்குள் எதிர்கால தமிழ் சமுதாயத்தின் அறிவுத்திறன் மூழ் கடிக்கப்பட்டு வருகின்றது. சத்தமில்லாத வகையில் தமிழ் எதிர்கால சந்ததியினரின் இன உணர்வையும் தேசியப்பற்றையும் சிதைக்கும் நடவடிக்கைகள் பேரினவாதிகளால் முழு வீச்சாக மேற்கொள்ளப் பட்டுவரும் நிலையில், அதற்குத் துணை போகின்றன இத்தகைய சினிமாவிம்பங்கள். பணத்துக்காகச் சினிமாக்களில் வந்து ஆட்டம் போட்டு விட்டு செல்லும் சினிமாக் கூத்தாடிகளைக் கதாநாயகர் களாக மட்டுமின்றி கடவுளர்களாகவும் பார்க்கும் உணர்வு மெல்ல மெல்ல இலங்கையில் தமிழ்ப் பிஞ்சுகள் மனதில் வேரூன்றத் தொடங் கியிருப்பதைப் பல்வேறு சம்பவகள் கூறி நிற்கின்றன. கத்தியின்றி, யுத்தமின்றி, இரத்தமின்றி தமிழினத்தின் இருப்பையும் அவர்கள் உயி ராகப் பேணி வரும் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் சிதைக்கும் நடவடிக்கைகளில் அதிகாரம் வெற்றியடைந்து வருவதற்கு இது போன்ற சினிமா மாயையின் பரவுகையும் முக்கியமான காரணம்.


தமிழினத்தின் இருப்பை வலியுறுத்தி முப்பது ஆண்டு காலமாக உலகே வியக்கும் வகையில் நிகழ்த்தப்பட்ட விடுதலைப்போர் முள்ளி வாய்க்கால் அவலத்தின் பின் ஆயுத மௌனத்தில் வந்து நிற்கிறது. தாயகத்திற்காகவும், தமிழ் சந்ததியின் எதிர்கால இருப்புக்காகவும், தமிழ் மக்களின் நிம்மதியான கௌரவமான வாழ்வுக்காகவும் தமது இளமைக் கால கனவுகளையெல்லாம் தூக்கியெறிந்த ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் சிதைக்கப்பட்ட கல்லறைக்குள் துயின்று வருகின்றனர். ஆயினும் இந்த இளைஞர்களின் தியாகத்தை அவமானப் படுத்தும் வகையிலான சம்பவங்கள் அண்மைக்காலமாக நிகழ்ந்து வருகின்றன.

தென்னிந்திய சினிமா நாயகனான அஜித்குமாரின் படத்தை வைத்திருந்த மாணவி ஒருத்தியை அவளது அண்ணன் கண்டித்ததால் தனக்குத்தானே தீ மூட்டி அவள் உயிர் பிரிந்த அவலம் அண்மையில் யாழ்ப்பாணம் ஆவரங்கால் பகுதியில் நிகழ்ந்துள்ளது. 16 வயதுடைய குறித்த பாடசாலை மாணவி அஜித்குமாரின் தீவிர ரசிகை. அவள் தனது மேசையில் அஜித்தின் படங்களைக் குவித்து வைத்திருந்துள் ளாள். இந்த நிலையில் வெளிநாட்டில் இருந்து வந்த அவளது அண்ணன், தங்கையின் மேசையில் குவிந்திருந்த அஜித்தின் படங்களைப் பார்த்து ஆத்திரம் கொண்டு, படிப்பை விட்டிட்டு இதுவோ நடக்குது? என்று தங்கையைக் கண்டித்துள்ளார். அத்துடன் மேசையில் இருந்த அஜித் குமாரின் படங்களை அவர் ஆத்திர மேலீட் டால் கிழித் தெறிந்தார் என்றும் கூறப்படுகிறது. ஆனால் தன் அண்ணன் அஜித்தின் படங்களைக் கிழித்தெறிந்ததை கண்ட தங்கை, உடனே ஓடிச்சென்று, தனக்குத்தானே தீமூட்டி, தற் கொலைக்கு முயன்றுள்ளார். தீயில் எரிந்த படி அங்கு மிங்குமாய் ஓடித்திரிந்த மாணவியின் உடலில் பற்றியிருந்த தீ அணைக்கப்பட்டு அவர் உடனடியாகவே யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டிருக்கிறார். உடலில் பெரும் பகுதி தீயில் கருகிய நிலையில் சேர்க்கப்பட்ட மாணவியின் உயிரைக்காப் பாற்ற யாழ். போதனா வைத்திய சாலை வைத்தியக் குழுவினர் கடுமை யாகப் போராடினர். ஆயி னும் இறுதியில் அவர் உயிரிழந்த செய் தியையே அவரின் பெற்றோருக்கு வைத்தியர்களால் வழங்க முடிந் தது. ஆவரங்காலில் நிகழ்ந்த இத்துயரச் சம்பவம் இன்றைய தமிழ் எதிர்கால சந்ததியினரின் பிஞ்சு மனதுகளில் தென்னிந்திய திரைப்பட ஆதிக்கம் எவ்வளவு தூரம் வேரூன்றியிருக்கிறது என் பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. சாதாரணமான ஒரு சினிமாக் கூத்தாடியின் புகைப்படத்துக்காக ஒரு மாணவி உயிரைவிடும் அளவுக்கு சினிமா எங்கள் பிஞ்சுகளை இரும்புப்பிடிக்குள் வைத் திருக்கிறது.

இது மாத்திரமில்லாமல் தென்னிந்திய- சினிமாப்பட வெளியீடு களின் போது நடிகர்களின் 'கட்-அவுட்' டுக்கு பாலபிஷேகம் செய்யும் மரபும் தோன்றிவருகின்றது. தமிழ் மக்களின் விடுதலைக்காக நடத் தப்பட்ட போரில் பங்கேற்ற பல இளைஞர்கள் அங்கவீனமானவர் களாகவும், முன்னாள் போராளிகள் என்ற அடைமொழியோடும் வேலை வாய்ப்புகளின்றி வாடி நிற்கின்றனர். ஒரு வேளை உணவுக்கு கூட பணமில்லாது வறுமை அவர்களை வாட்டி வதைத்திருக்கிறது. சில தாய்மார் தம் குடும்பத்தலைவர்களைப் போரில் பறிகொடுத்ததால், பொருளாதார ஆதாரமின்றி, தன் பிள்ளைகளுக்கு ஒரு வேளை உணவு கொடுக்க முடியாததால், அவர்களோடு தாமும் சேர்ந்து தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்களும் ஆங்காங்கே இடம் பெற்று வரு கின்றன. ஆனால் எம் சமூக இளையவர்களோ சினிமா விம்பங்களை உண்மையென நம்பி, அதற்காக பணத்தையும், நேரத்தை யும் மட்டு மன்றி பெறுமதியற்ற உயிரையும் வீணடிக்கத் தொடங்கி விட்டனர்.

சினிமாப் பாணியிலான கோஷ்டி மோதல்கள், வாள்வெட்டுச் சம்பவங்கள் என்பனவும் தினம் தினம் இடம்பெற்று வருகின்றன. இச்சம்பவங்களில் ஈடுபட்டு கைது செய்யப்படுவர்கள் 20-25 வய தான இளைஞர்கள் என பொலிஸ் தரப்பும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சினிமாவில் வெறும் கைதட்டல்களுக்கு மட்டும் காட்டப்படும் வன்முறைகளை நடைமுறை வாழ்வில் இன்றைய இளம் சந்ததியினர் உண்மையாகவே பின்பற்ற முற்படுகின்றனர். இதனால் பல இளை ஞர்கள் எதிர்கால வாழ்வையே தொலைத்துவிட்டு ரவுடிகள் என்ற அடைமொழிகளுடன் சிறைச்சாலைகளில் வாழ்நாளை கழிக்கும் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.


பேரினவாதம் தமிழினத்தை அழிப்பதற்கு எடுக்கும் முயற்சிகளை நாங்களே இலகுபடுத்தி வருகிறோம் என்பதையே இத்தகைய நிகழ்வுகள் சொல்லிநிற்கின்றன. இவையெல்லாம் தமிழினத் தின் கல்விப் பெருமை யையும் சீர்குலைக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் என் பதை உணரா மல் சினிமா மாயைக்குள் மூழ்கி தமது கல்வியையும் கௌரவத்தையும் இழக்கும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன. தென்னிந் திய சினிமாப் படங்களை இறக்குமதி செய்யவும் அவற்றைத் திரையிடவும் அதிகாரபீடம் ஆர்வம் கொண்டுள்ள தன் பின்னணியும் இதுதான். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## இறப்பின் பின்னும்




காற்றின் பெருமை - நாம்
சுவாசிக்கும் வரைதான்
சூரியனின் பெருமை - அதன்
வெளிச்சம் இருக்கும் மட்டும்தான்
நீரின் பெருமை - நாம்
பயன்படுத்தும் மட்டும் தான்
நட்பின் பெருமை - எம்மோடு
நண்பர்கள் இருக்கும் மட்டும்தான்
வாழ்க்கையின் பெருமை - நம்
வாழும் மட்டும்தான் - ஆனால்
கல்வியின் பெருமை - நாம் -
இறப்பின் பின்னும் தொடரும்.....

தி.கௌிகா
வெள்ளம் போக்கட்டி, கொடிகாமம்.

## கனவுகள் பூசப்பட்ட மனிதங்கள்

நனவிலி நிலையில்
தொடரும் வாழ்வியலின்
போலிகளை உடுத்தி
வேடமிட்டு வாழ்கிறது
நவீன மனிதம்
இன்னும் இன்னுமாய்
மாயை எனும்
கனவுகளைப் பூசிக்கொண்டு
நிஜங்களைப் புதைத்துக்கொண்டு
நாள்கள் நகர்கின்றன

திடீரென விழித்தவனிடம்
உடைந்துபோன கனவாய்
மீண்டும்
சுழற்சி பெற முடியாத
நிகழ்வாய்
கனவுகள் அழிகின்றன
மனிதவியல் போக்கில்
நகரும்
போலித்தனங்கள்



மிகைப்படுத்தி சொல்லப்படும்
எல்லா விடயத்துள்ளும்
ஆசைகளாய்
அமிழ்த்தப்படும் நிமிஷங்களில்
வேசங்கள் எப்போதோ
அவிழ்க்கப்படும்போது
தலைகுனிதல் பற்றி
மனிதங்கள் சிந்திக்கப்
போவதில்லை

மிகைக் கனவுகள்
பூசிய
வேசமிட்ட மனிதங்கள்
மிகைக்
கனவில் நகர்வதால்
எங்கே....
விடியப்போகிறது.

எஸ்.பி.பாலமுருகன்,
பதுளை.



## புலப்படுகிறாய்

உன் கோபங்களை
இரசிக்கின்றேன்
ஆனாலும்
என் உள்ளக்
காயங்களை
ஆற்றுப்படுத்த
முடியாத
தருணத்திலும்
நீ அழகாகவே
என் கண்களில்
புலப்படுகிறாய்.

- வே.வே.அகிலேஸ்வரன்
மருதங்கேணியூர்.

## தங்கமான புருசன்



சீதனம் வாங்கி நான்
திருமணம் செய்தால்
அம்மாவின் பார்வையிலே
தங்கமான புருசன்

சீதனமே வேண்டாமென
சிரித்த முகம் காட்டி
மனைவியை கைப்பிடித்தால்
மாமியார் பார்வைக்கு நான்
தங்கமான புருசன்

கட்டிக் கொண்ட மனைவியை என்
காலடியில் வைத்திருந்தால்
தந்தையின் பார்வையிலே
தங்கமான புருசன்

அன்பு மனைவியவளுக்கு
அடங்கியே வாதழ்ந்தால்தான்
அவளின் பார்வையிலே
தங்கமான புருசன்

எண்ணங்கள் வேறான
உள்ளங்கள் - அதிலே
எப்போதுதான் தெரிவேனோ
தங்கமான புருசனாய்.....

## முதுமை

தாண்டுபோன கண்கள் இரண்டும்
கலைந்து போன கனவுகள் சொல்லும்
குழி விழுந்த கன்னம் இரண்டும்
அனுபவத்தின் ஆழம் சொல்லும்
நுரையலையாய் நரைத்த முடி
தலைமுறையின் தகவல் சொல்லும்
கூன் விழுந்து வளைந்த தேகம்
தான் சுமந்த சுமைகள் சொல்லும்
தடுமாறும் பாதம் இரண்டும்
தடம்பதித்த பாதை சொல்லும்
வரி விழுந்த தோள்கள் இரண்டும்
வலி மிகுந்த வாழ்வைச் சொல்லும்
அவர் போட்ட அத்திவாரம்
மாடிவீடாய் மாறி நிற்கும்
அவர் வளர்த்த மர நிழலில்
ஆடு மாடு கட்டி நிற்கும்
அவர் மட்டும் முதியோர் இல்லத்தில்
முகவரி தொலைந்தவராய்.....

அ.அஜந்தன்.
கந்தர்மடம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழுவுக்கு அவசியமென்ன?

சண்டேடைம்ஸ் நிர்மலா கன்னங்கரா எழுதியது.


தமிழில்: ஜஸ்ரின்

**நாட்டில் போர் நடந்த காலப்பகுதியில் பாதிப்புக்கள் ஏற்பட்ட பகுதிகளில் காணாமற் போனவர்கள் குறித்து விசாரணை மேற்கொள்வதற்கென முன்மொழியப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவை ஏற்றுக்கொள்ள முடியாதென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**

**போர்க்காலப்பகுதியில் வடக்கிலும், கிழக்கிலும் இடம்பெற்ற காணாமற் போதல்கள் குறித்து விசாரணை மேற்கொள்வதற்கு ஒரு ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிப்பதற்கு தனது செயலாளரான லலித் வீரதுங்கவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகார பூர்வமான ஆணையைக் கடந்த மாத இறுதியில் வழங்கியிருந்தார். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் வழிநடத்தற் குழுவுக்கும் ஜனாதிபதியின் செயலாளரான லலித் வீரதுங்கவே தலைமை தாங்கிக் கண்காணித்துவருகிறார்.**

**எனினும் ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு, அதற்கான திகதியும் முடிவு செய்யப்பட்டதன் பின்னரே ஆணைக்குழு பற்றிய விபரங்களை ஊடகங்களுக்கு வெளியிட முடியும். அதுவரையில் அது குறித்த முன்னேற்றங்களை வெளியிடுவது கடினம் என்று ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.**

**ஆயினும் இது குறித்து பல்வேறு விமர்சனங்களை எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ளன. அந்தக் கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள் சிலரின் கருத்துக்கள் இதோ-**



**சுரேஷ் பிரேமச்சந்திரன்**
(கூட்டமைப்பின்பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினரும்)

இந்த ஆணைக்குழுவின் ஜனாதிபதியின் கட்டுப் பாட்டில்இருக்கும் இராணுவ அதிகாரிகள் அல்லது அரசியல் அடிவருடிகள் தான் நியமிக்கப்படுவார்கள். பாரபட்சமற்ற, நடுநிலையான உறுப்பினர்களைக் கொண்டதான ஒரு குழுவை ஆணைக்குழுவுக்கு நியமிக்க வேண்டும். இல்லாவிட்டால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரும் தமிழ் மக்களும் காணாமற் போனவர்கள் குறித்த எந்த ஆணைக்குழுவையோ அல்லது அறிக்கைகளையோ ஏற்றுக் கொள்வதற்கு தயாரில்லை.

கடந்த இரண்டாண்டுகளாக நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் எந்த அக்கறையும் காட்டாத அரசு இவ்வாறான ஒரு ஆணைக்குழுவை திடீரென நியமிப்பதற்கான அவசரம் என்ன? ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளையின் இலங்கைக்கான பயணமும், நவம்பரில் கொழும்பில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் மாநாட்டுக்காக சர்வதேசத் தலைவர்கள் வரவிருப்பதுமே அரசின்இத்தகைய அவசர ஆணைக்குழு அறிவிப்புக்கான பின்னணியா?

கடந்த மூன்றாண்டுகளுக்கும் மேலாக வேண்டுமேன்றே நல்லிணக்க ஆணைக்குழுவின் ப்ரிந்துரைகளை நடைமுறைப்படுத்தத் தவறிவிட்ட நிலையில் அரசு, தன்னை நல்ல பிள்ளையாக உலகுக்கு காட்டவே இப்படி அவசரமாக ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்துள்ளது. ஆயினும் அரசால் தமிழரையோ அல்லது சர்வதேச சமூகத்தையோ ஒருபோதும் ஏமாற்ற முடியாது .

இதுவரை இலங்கை அரசால் அமைக்கப்பட்ட எந்தவொரு ஆணைக்குழுவும் எந்த விசாரணையையும் பாரபட்சமற்ற முறையில் நடைமுறைப்படுத்தவில்லை. ஜனாதிபதி ஆணைக்குழுவென்பது ஓர் நகைப்புக்குரிய விடயமாகவே மாறிவிட்டது. அத்துடன் அரசால் நியமிக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழுவின் விசாரணைகளின் பெறுபேறுகள் எவ்வாறு இருக்கும் என்பதை ஒவ்வொருவரும் அறிந்தே உள்ளனர் . அது மட்டுமன்றி ஆணைக்குழுவில் இறுதி முடிவு உறுப்பினர்களினால் எடுக்கப்படுவதில்லை. ஜனாதிபதியால் தான் எடுக்கப்படுகின்றன. எனவே வீணானதும் பயனற்றதுமான இத்தகைய ஆணைக் குழுக்களை நியமிப்பதற்கு பணத்தையும் நேரத்தையுமே அரசு செலவளிக்கின்றது.



**திஸ்ஸ அத்தநாயக்க**
(ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினரும்)

காணாமற் போனவர்கள் குறித்து விசாரிப்பதற்கு அரசு உள்ளார்ந்த பூர்வமாக விருப்பம் கொண்டிருக்கவில்லை. இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது பொது நலவாய நாடுகளின் தலைவர்களைச் சமாளிப்பதற்காகவேயன்றி வேறேதற்காகவுமல்ல. அரசு உண்மையில் நல்லிணக்க ஆனைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த விரும்பியிருந்தால் அதற்குக் கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாகப் போதிய கால அவகாசம் இருந்தது. அவர்கள் இப்போது திடீரென ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிப்பதற்கு ஏன் விளைகின்றனர் என்பது பலரும் அறிந்த ஓர் இரகசியமே .

அவர்கள் இதுவரையில் நியமித்த ஆணைக்குழுக்கள் எத்தனை? அவற்றின் பரிந்துரைகளை எப்பொழுதாவது நடைமுறைப்படுத்தியுள்ளார்களா? என்று நிறையக்கேள்விகள் எழுகின்றன. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுடன் தீர்வைக் காண்பதிலும் மற்றும் காணாமற் போனவர்கள் குறித்து விசாரணைகளை நடத்தி அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அவர்களின் உற்றார் உறவினர்களுக்கும் தெரிவிப்பதன் ஊடாகவுமே அரசு உளமாரச் செயற்படுகின்றதென்பதை உலகுக்கு காட்ட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் வேண்டுதல்.



**பிமல் ரட்நாயக்க**
(ஜே.வி.பியினர் மத்திய குழு உறுப்பினர்)

தப்புச்செய்பவர்களுக்கு எதிராக ஆணைக்குழு ஒருபோதும் நடவடிக்கை எடுப்பதில்லை. மாறாக இத்தகைய ஆணைக்குழுக்கள் கொலைகாரர்களையும் மற்றும் தவறிழைத்தவர்களையுமே பாதுகாப்பது வழமை. அது மட்டுமன்றி போர் முடிவடைந்ததையடுத்து காணாமற் போனவர்கள்குறித்து உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், போரால் பாதிப்புற்ற மக்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நாங்கள் கேட்டிருந்தோம். ஆனால் எமது யோசனைகளுக்கு காது கொடுக்கவில்லை அரசு. மாறாக வடக்கில் படையினர் காணிகளைச் சுவீகரிக்கவும், முகாம்களை அமைக்கவுமே அவசரமாக அனுமதியை வழங்கியது. கிளிநொச்சிப் பிரதேசத்தில் ஒரு ஒதுக்குப்புறமான பின்தங்கிய நிலையில் உள்ள பாடசாலைக்குக் கூட இராணுவத்தினரின் அனுமதியின்றி கணினிகளைக் கூட அன்பளிப்பாக எங்களால் வழங்க முடியாதுள்ளது. அந்தளவுக்கு வடக்கும் கிழக்கிலும் மூலை முடுக்கெங்கும் இராணுவத்தினர் உள்ளனர். வடக்கும் கிழக்கும் இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாது கிலாரி கிளின்ரன் உட்பட அமெரிக்க செனட்டின் 38 உறுப்பினர்களும் இல்லாமலிருந்தால் மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகம் நல்லிணக்க ஆணைகுழுவை நியமித்தே இருக்காது. இவ்வாறான பின்னணியில் தற்போது நியமிக்கப்படவுள்ள ஜனாதிபதி ஆணைக்குழு மாத்திரம் பாரபட்சமற்ற விசாரணைகளை மேற்கொள்ளும் என எவ்விதம் எதிர்பார்க்க முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21, ஓகஸ்ட் – 27, ஓகஸ்ட், 2013
sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

## என்ன சொல்லப் போறாவோ...?

வடமாகாணத் தேர்தல் பற்றிய பதற்றத்தை விடவும் அரச தரப்புக்கு இப்போதுள்ள கலக்கம் ஐ.நா.வின் மனிதஉரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் வருகைதான்.

மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு தொடர்ந்தும் மெத்தனப் போக்கையே கடைப்பிடித்து வந்தது. அடுத்தமுறை அமர்வின்போது சில பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியதாகக் கதையளந்து இன்னமும் கால நீட்டிப்பைப் பெற்றுக் கொள்வதே அரசின் திட்டாக இருந்தது. ஆனால் அரசே எதிர்பாராத வகையில் இலங்கையில் மனித உரிமைகளின் நிலை என்னவென்று அறிந்து கொள்வதற்காக நவநீதம்பிள்ளையே நேரடியாக இலங்கைக்கு வர முயன்றார்.

வழக்கம்போலவே அவரது வருகைக்கான காரணம் என்னவென்று சரிவரத் தெரிந்து கொள்ளாத பேரினவாதக் கட்சிகள் "நவநீதம்பிள்ளை இலங்கைக்குள் காலடி வைத்தால் நடப்பதே வேறு" என்று ஊர்ச்சண்டித்தனம் காட்டின. அத்தோடு அவரை இலங்கைக்கு வரவிடாமல் தடுப்பதற்கு என்னென்ன வழிகள் எல்லாம் உண்டோ அத்தனை வழிகளிலும் இயலுமட்டும் அரசும் முயன்று பார்த்தது. ஆனாலும் அவரின் வருகையைத் தடுக்க முடியாதுபோகவே "இலங்கையில் எங்கும் போகலாம். யாரையும் சந்திக்கலாம். ஆனால் இறுதிப்போர் நடைபெற்ற இடங்களுக்குச் செல்வதற்கோ, போரில் பாதிப்புற்றவர்களைச் சந்திப்பதற்கோ இலங்கையின் இறையாண்மை இடம்கொடாது'' என்று அரச அமைச்சர்கள் சிலர் கொக்கரித்தனர்.


ஆனாலும் இந்தக் கருத்துக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இராஜதந்திர ரீதியில் தமது எதிர்ப்பைப் பலமாக வெளியிட, மீண்டும் ஒரு பின்னடைவை இலங்கை சந்திக்க நேரிட்டது. இப்போது எங்கு வேண்டுமானாலும் - முள்ளிவாய்க்காலுக்கும் - செல்வதற்கு நவநீதம்பிள்ளைக்கு தடையில்லை என்று அரசு தன் வாயாலேயே சொல்ல வேண்டிய நிலை. வந்துபோகும் நவநீதம்பிள்ளை இலங்கையைப் பற்றி என்ன அபிப்பிராயத்தைச் சொல்லப் போகின்றாரோ? அது மனித உரிமைகள் பேரவையில் என்னென்ன எதிர்விளைவை ஏற்படுத்தப் போகிறதோ? என்ற நெஞ்சிடியில் ஏங்கிக் கிடக்கிறது அரசு.

# சிங்கக்கொடியுடன் சீன மீனவர்கள்

ஹரன்

### துயரின் குரல் -1

வடமராட்சி, பருத்தித்துறை கடற்பகுதிக்குள்ள சிங்கக்கொடியோட சீனாக்காரன் வந்து மடி அடிச்சு தொழில் செய்து போட்டு போயிருக்கிறான். அதில எங்கட மீனவர்களின்ர ரண்டு வலை அறுபட்டிருக்கு. அவையள் ரண்டு பேரும் கஷ்டத்தின் மத்தியில் தொழில் செய்றவை. இப்ப வலையில்லாமல் சரியாக் கஷ்ரப்படுகினம். இது தொடர்பாக நாங்கள் சமாச கூட்டத்திலையும் கதைச்சம். சமாசக் கூட்டமொண்டுக்கு வந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கும் கொண்டு சென்றம். அவர் நடவடிக்கை எடுப்பார் என்று நினைக்கிறன். அரசாங்கமும் தொண்டு நிறுவனங்களும் மழை, வெள்ளம் ஏதாவது வந்தா உடனுக்குடன நிவாரணம் எல்லாம் குடுக்கினம். கடந்த மாரி மழைக்கு வெங்காயம் அழிஞ்சதற்கு எல்லாம் சனத்துக்கு நிவாரணம் குடுத்ததாக கேள்விப்பட்டம். ஆனால் நெடுகலும் மோசமாக பாதிக்கப்படுற எங்களைத்தான் ஆரும் கண்டு கொள்ளுறதே இல்லை. ஏற்கனவே இந்தியாக்காரன் வந்து றோலரில மடி அடிச்சு தொழில் செய்து போட்டு போனவன். நாங்கள் மோசமாக பாதிக்கப்பட்டம். எங்கட வலையள் எல்லாம் அள்ளுப்பட்டு போச்சு. இப்ப புதுசாச் சீனாக்காரன் வந்திருக்கிறான். அவனும் வந்து மடி அடிச்சு தான் தொழில் செய்றான். கொஞ்ச நாளைக்கு முதல் பருத்தித்துறைக் கடலில் கரையோட வந்து மடி அடிச்சிருக்கிறான். எங்கட கடல் வளம் முற்றாக அள்ளுப்பட்டுக் கொண்டு போகுது. எங்கட மீனவர்கள் நிறைய கஷ்டங்களை தொடர்ந்து அனுபவிக்க வேண்டியதாகக் கிடக்கு. எங்கட நஷ்டத்தை சொல்லி நிவாரணம் பெற வேண்டும் எண்டது எங்கட நோக்கமில்ல. எதிர்காலத்தில இப்படி நடக்கக் கூடாது எண்டதுக்காகத்தான் உங்களுக்கு இந்தப்பிரச்சினையயல்லாம் சொல்லுறன்



### துயரின் குரல்-2

எங்களால இப்ப என்ன தம்பி செய்ய முடியும். அறிவிச்சு போட்டு பேசாம இருக்க வேண்டியது தானே எங்கட தலைவிதி. ஏற்கனவே கஷ்டம். வறுமை. மீனவர்களாகிய நாங்கள் எந்த வித உதவியும் இல்லாம கஷ்டப்படுறம். என்ன நடந்தாலும் ஆரும் கண்டு கொள்ளுறதில்லை. எங்கட கஷ்டத்தை நாங்கள் தான் பார்த்து ஏதோ சமாளிச்சு வாழ்ந்து வாறம். ஆனா அதைக் கூடா விடமா இப்படி இந்தியாக்காரன் சீனாக்காரன் எண்டு லைனில வந்து மடி அடிச்சு எங்கட வளத்தை அள்ளிக் கொண்டு போனா நாங்கள் என்ன செய்யுறது. வறுமையால தற்கொலை தான் செய்ய வேண்டி வரும் .

### ஏறி மிதிக்கும் சீனமாடு

போரிடம் எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு தொடர்ந்தும் அல்லாடியபடி வாழ்ந்து வரும் மீனவ சமூகத்தை அண்மையில் வடமராட்சிக்கடலில் நிகழ்ந்த சீனா நாட்டு மீனவர்களின் ஊடுருவல்கள் இன்னும் கலக்கத்துக்குள்ளாகியுள்ளன. கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு, மட்டக்களப்பு போன்ற கடற்பகுதிகளில் சீன மீனவர்களின் ஊடுருவல்களை அவதானித்துள்ளனர் அப்பகுதி மீனவர்கள். மட்டக்களப்புப் கடற்பகுதியில் அத்துமீறி புகுந்துமடி அடித்து தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட 38 சீன மீனவர்கள் இலங்கைக் கடற்படையால கைதுசெய்யப்பட்டிருந்தனர். பின்னர் இலங்கைக்கு சீனாவால் விடுக்கப்பட்ட இராஜதந்திர அழுத்தங்கள் காரணமாக அவர்கள் விடுவிக்கப்பட்டனர். இவ்வாறு மட்டக்களப்பில் தொடங்கிய சீனாவின் அத்துமீறிய மீன்பிடி தற்போது வடமராட்சி கடல் வரை நீண்டிருக்கிறது.

ஏற்கனவே இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட மீன்பிடி ஒப்பந்தம் இந்த அத்துமீறல் மீன்பிடியை மேலும் ஊக்குவித்திருக்கிறது. ஆழ்கடல் உயிரினங்களை கூட தோண்டி எடுக்கும் வல்லமை கொண்ட ட்றோலர் படகுகளில் தடை செய்யப்பட்ட மடிவலைகளைப் பயன்படுத்தி நிகழ்ந்து வருகிறது கடல்வளச்சுரண்டல். ஆயினும் இத்தகைய சுரண்டல் இலங்கை அரசின் அனுசரணையுடனேயே தொடர் கதையாக நீண்டு வருவது தான் வேதனையான விடயம். இலங்கை கடற்பகுதியில் இருந்து 400 கடல் மைல் தொலைவில் உட்பட்ட பகுதியில் சீன மீன்பிடிப் படகுகள் தொழில் நடவடிக்கையில் ஈடுபடலாம் என இலங்கை- சீன ஒப்பந்தம் கூறுகிறது. சீன மீனவர்களுக்கு இப்படிச் செங்கம்பளம் விரித்ததால்தான் மறுபக்கத்தில் இந்திய மீனவர்கள் எமது கடற்பகுதிக்குள் வந்தால் பிடியுங்கள் என கடற்படைக்கு உத்தரவிட்டிருக்கிறார் இலங்கையின் மீன்பிடிநீரியல் வள அமைச்சர் ராஜிதசேனாரட்ன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமன்

# தலைவா
# தடையின் மர்மம்



இளைய தளபதி விஜய். தமிழின் முன்னணி நடிகர். சம்பளம் 20 கோடியைத் தாண்டிவிட்டது. அடுத்த சுப்பர் ஸ்ரார் விஜய் தான் என்ற ரசிகர்களின் கை காட்டல் வேறு. போட்ட முதலீட்டை எந்தப் பங்கமும் இல்லாமல் தரக்கூடிய படங்களின் சொந்தக்காரன் என்ற தயாரிப்பாளர்களின் கணிப்பு. இவையெல்லாமே விஜயை தமிழகத்தில் செல்லப்பிள்ளையாக்கியிருந்தன.

ஒரு காலத்தில் காதல் நாயகனாக வலம் வந்துகொண்டிருந்த விஜய் திருமலை படத்துக்குக்குப் பின்னர் அதிரடி நாயகனாக பரிணமித்தார். காது கிழியும் 'பஞ்ச்' வசனங்களும், ஒரே அடியில் இருபது முப்பது அடியாள்களை வீழ்த்தும் சண்டைக்காட்சிகளும், துள்ளல் நடனமுமாக விஜய்க்கென்றே ஒரு பாணியில் படங்கள் வரத் தொடங்கின. இதனால் கதைக்காக விஜயை நாடாமல், விஜய்க்காக கதை செய்யும் இயக்குநர்கள் அதிகரித்தார்கள். ஆனால், திரையில் ஒரேயடியில் நூறுபேரை வீழ்த்தக் கூடிய விஜய், தமிழக முதல்வர் கொடுத்த ஒரே அடியில் அதலபாதாளத்துக்குள் வீழ்ந்துபோனதுதான் பரிதாபம்.

தலைவா. இந்தப் படம்தான் தமிழகத்தின் அதிகார பீடமான ஜெயலலிதாவுடன் விஜயை மோத வைத்து வேடிக்கை பார்த்துள்ளது. விஜய் முன்னணி நாயகனாக இருப்பதால் அவரின் படங்களை வாங்க தொலைக்காட்சி நிறுவனங்களுக்கிடையே கடும் போட்டி இருப்பது வழமை. தொடர்ச்சியாக விஜயின் படங்களை ஒரு காலத்தில் தி.மு.கவின் ஆதரவு அலை வரிசையான சன்ரீவி வாங்கி வெளியிட் டது. ஆயினும் அது வாங்கி வெளியிட்ட விஜயின் படங்களான வில்லு, சுறா, வேட் டைக்காரன் போன்ற படங்கள் தொடர்ச்சியாகத் தோல்வியைத் தழுவியதால் அதனை ஈடுகட்ட விஜய் நடித்த 'காவலன்' படத்தை அடிமாட்டு விலைக்குக் கேட்டது சன்ரீவி. ஆனால் விஜய் தரப்பு அந்தப் படத்தை வேறொரு தொலைக் காட்சிக்கு விற்றுவிட, சன்ரீவி நிர்வாகத்துக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அப்போது தமிழகத்தை தி.மு.கவே ஆண்டு வந்ததால் தமது அதிகாரத்தையும், ஊடகப் பலத்தையும் பயன்படுத்தி, காவலன் திரைப்படத்தை வெளிவர விடாமல் ஏராளமான தடைகளைப் போட்டது. அந்த நேரத்தில்தான் விஜயும் அவர் தந்தை எஸ். ஏ.சந்திரசேகரனும் அப்போது எதிர்க்கட் சித் தலைவியாக இருந்த ஜெயலலிதாவிடம் காவலன் விடயத்தில் ஆதரவு தருமாறு கோரினர். இதனால் உடனடியாகவே அ.தி.மு.க. சார்பான திரையரங்குகளில் காவலன் திரைப்படம் வெளியாகி வெற்றியும் பெற்றது. இந்த நன்றிக் கடனுக்காக சட்டசபைத் தேர்தலில் விஜயும் அவரது ரசிகர்மன்றங்களும் பகிரங்கமாக ஜெயலலிதாவை ஆதரித்தனர். அத்தோடு விஜயின் வேலாயுதம் படத்தையும் ஜெயா ரீவி வாங்கியது. இதனால் தி.மு.கவுக்கு எதிரான சினிமா நட்சத்திரமாக விஜய் அடையாளப்படுத்தப்பட்டார்.

இத்தோடு விஜய் இருந்திருந்தால் இந்த ஆட்சி முடியும்வரை அவரது காட்டிலும் எந்தவித இடையூறு மழையும் பொழிந்திருக்காது. ஆனால் "விஜய் விரைவில் அரசியலுக்கு வருவார். நாளைய முதல்வர் அவர் தான்" என்று பகிரங்கமாக அறிவித்தார் விஜயின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகரன். அத்தோடு நில்லாமல் விஜய் ரசிகர் மன்றங்களை மக்கள் இயக்கமாக மாற்றினார். இவையெல்லாம் விஜய்மீது ஜெயாவின் கோபப்பார்வையைத் திருப்ப வைத்தன. மெல்ல மெல்ல விஜய் படங்களுக்கு எதிர்பாராத பக்கங்களில் இருந்து இடையூறுகள் உருவாகத் தொடங்கின.

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடித்த துப்பாக்கி திரைப்படம் தலைப்புப் பிரச்சினை காரணமாக முதலிலும் முஸ்லிம்களை இழிவு படுத்திவிட்டதாகவும் பின்னரும் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்திருந்தது. இந்த நிலையில்தான் பிரமாண்டமான தயாரிப்பில் தலைவா திரைப்படம் உருவானது. பெயரைப் போலவே மக்களுக்கு தலைவராகும் நோக்கத்தோடுதான் இந்தப் படத்தில் விஜய் நடிக்கிறார் என்று ஆரம்பம் முதலே ஜெயலலிதா தரப்பு சந்தேகக் கண்கொண்டு பார்க்க ஆரம்பித்தது. தலைவா படம் உருவான அதே சமயத்தில் தலைவன் என்ற பெயரில் இன்னொரு படமும் எடுக்கப்பட்டு வந்தது. இந்தப் படத்தில் நாயகனாக ஒரு காலத்தில் ஜெயலலிதாவின் வளர்ப்புப் பிள்ளையாக இருந்த திவாகரனின் உறவினரான இளைஞர் அறிமுகமாகியிருந்தார். ஆனால் ஏதேதோ குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அந்த இளைஞர் சிறைக்குள் தள்ளப்பட்டதோடு தலைவன் படத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

இந்த நிலையில்தான் ஜெயலலிதாவைத் தாக்கும் வசனங்கள், அறிஞர் அண்ணாவின் வாரிசு விஜய்தான் என்பதுபோன்ற காட்சிகள் படத்தில் இடம்பெற்றிருப்பதாக ஜெயாவின் காதுக்குள் தகவல்போனது. அவ்வளவுதான். அதுண்பின்னர் அனாமதேய வெடிகுண்டு மிரட்டல்களால் திரை அரங்க உரிமையாளர்கள் பயந்ததுபோல பாவனை செய்து கொண்டு, தமிழகத்தில் தலைவாவை வெளியிட மறுத்தனர். இதேபோன்ற பிரச்சினைகள் விஸ்வரூபத்துக்கு வந்தபோது கமலஹாசனோடு சேர்ந்து குரல் கொடுத்த திரையுலகத்தினர் 'அம்மாவுக்கு' பயந்து அடக்கி வாசிக்கின்றனர்.

தமிழகம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வெளியாகிய தலைவா வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. ஆனால் தமிழகத்தில் இன்னும் படம் திரையிடப்படாததால் திருட்டு வி.சி.டி. மூலம் தலைவாவைப் பார்ப்போர் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. இந்த நிலை நீடித்தால் இனித் தலைவாவைத் திரையில் வெளியிட்டாலும் வசூலை அள்ளிக் குவிக்காது என்று எண்ணிய தயாரிப்பாளர் செய்தியாளர்கள் மூலம் இந் தப் படத்தை வெளியிட முதல்வர் ஜெய லலிதா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கண்ணீர் மல்கக் கோரினார்.

போதாக்குறைக்கு உண்ணாவிரதம் இருக்க அனுமதி கேட்டு விஜய், அமலா பால், சந்தானம், இயக்குநர் விஜய் ஆகியோர் விடுத்த கோரிக்கையை உடனடியாகவே தமிழக அரசு நிராகரித்துவிட்டது. இந்த நிலையில் தமிழக அரசுக்கெதிராக விஜய் தரப்பு வழக்குப்போடத் தயாராகிவருகிறது. இந்த நிலையில் விஜய்க்கு கலைஞர் கருணாநிதி தனது ஆதரவைத் தெரிவித்திருக்கிறார். இதனால் வெகுவிரைவில் மீண்டும் விஜய் தி.மு.க.பக்கம் சாய்வார் என்று கூறப்படுகிறது. எல்லாமே அரசியல் செய்யும் மாயம் தான்.★

# சிங்கக்கொடியுடன் சீனமீனவர்கள்

தனது நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை நாசமாக்க அயல்நாடுகளுடன் ஒப்பந்தங்களை ஏற்படுத்தி அதன் மூலமாகத் தனது கஜானாவை நிரப்பி வருகிறது அரசு. அதற்கு ஏதோ ஒரு வகையில் தன் கஜானா நிறைந்தால் போதும். நாட்டு மக்களுக்கு அதனால் என்ன பாதிப்பு ஏற்பட்டாலும் கவலையில்லை.

ஏற்கனவே கடந்த பல வருடங்களாக இந்திய மீனவர்களின் ஊடுருவல் சர்வ சாதாரணமாக வடமராட்சி, நெடுந்தீவு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் நடந்தேறின. இந்திய மீனவர்களின் அத்து மீறிய மீன்பிடியால் வடக்கு கிழக்கு வாழ் தமிழர்களின் மீன்வளம் முற்றாகச் சுரண்டப்பட்டது. பெருந்தொகையாக மீன்பிடி வலைகள் இந்திய மீனவர்களின் ஊடுருவல்களால் அறுத்து எறியப்பட்டிருந்தன. தமிழ் மீனவர்களுக்கு இலட்சக்கணக்கில் நஷ்டத்தை ஏற்படுத்தி அவர்களை வறுமையின் குழியில் தள்ளி அழகு பார்த்தன இந்திய ட்றோலர்கள். ஆத்திர மேலீட்டால் கிளர்ந்தெழுந்த இலங்கை மீனவர்களும் இந்திய மீனவர்களும் தமக்கிடையே முறுகி, மோதிக்கொண்டனர். இறுதியில் இலங்கை மீனவர்களால் பருத்தித்துறைக் கடற்பரப்பில் 70 பேரும் நெடுந்தீவு கடற்பரப்பில் 30பேருமாக இந்திய மீனவர்கள் 100 பேர் பிடிக்கப்பட்டு கரைக்கு கொண்டுவரப்பட்டனர். பின் நீதிமன்றங்களில் நிறுத்தப்பட்டு விசாரணையின்பின் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். இந்த முறுகல் நிலை இப்போது தான் சற்றுத் தணிந்திருக்கிறது. மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரட்ணவும் இனி இந்திய மீனவர்களின் ஊடுருவல் இருக்காது என்ற அர்த்தப்பட கூறிவருகிறார். ஆனால் இந்திய மீனவர்களின் ஊடுருவல்கள் ஓய மறுபுறத்தில் சீனாவின் ஊடுருவல் தொடர்ந்து வருவதை அண்மைய சம்பவங்கள் ஆதாரப்படுத்துகின்றன.

பாஸ் நடைமுறை, உயர் பாதுகாப்பு வலயம், கடல் வலய தடை, சிங்கள, இந்திய மீனவர்களின் ஊடுருவல் எனத் தொடர்ச்சியான அவலங்களால் பனையால் வீழ்ந்த இலங்கைத் தமிழ் மீனவர்களை மாடு போல ஏறி மிதிக்கத் தொடங்கியுள்ளது சீனமீனவர்களின் அத்துமீறல். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ சமரபாகு சீனா உதயகுமார்

# இ.சு.முரளிதரனின் தமிழ் சினிமாவின் பார்வையில் ஈழம்

*- வாசித்துத் தெரிந்தவையும் சில எண்ண வெளிப்பாடுகளும் -*

கலையும் இலக்கியமும் கலாசாரத்தைப் பேணிக் காக்க வல்லவை. காலத்தின் ஊடே பிரவேசிக்கும் ஆற்றல் பெற்றவை. அதாவது சமூகத்தில் நல்லதொரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவல்ல ஒளிப்படக் கலை (சினெமா) என்பது விம்பக் கட்புலனோடு மொழிகளையும் ஒருங்கே கொண்டிருப்பதால் அது யாவரையும் இலகுவில் கவர்ந்து விடுகிறது.

தமிழ் ஒளிப்படக் கலையினைப் பொறுத்தமட்டில் எண்பது வருடங்களிற்கும் மேற்பட்ட ஒரு பாரம்பரியத்தைக் கொண்டிருந்த போதிலும் சில கட்டுடைப்புகளில் இருந்து விடுபட முடியாத ஒரு சாபக்கேட்டினையே அது இன்றுவரை கொண்டிருக்கிறது. நாளையும் தொடர்வதற்கான அடையாளங்களும் சில விட்டு விலகாத் தன்மைகளும் இருக்கவே செய்கின்றன.

★ கடுமையான கதை போக்குகளின் இடையே காதலையும் நகைச்சுவையினையும் வலிந்து திணித்து காட்சிப்படுத்த முனைதல்.
★ ஒரே கதாநாயகன் தான் நடிக்கும் எல்லாப் படங்களிலும் தன்னை ஒரு அதி மானுடனாக வெளிப்படுத்த முனைதல்.
★ நகைச்சுவைக் காட்சிகளும் நம்பகத் தன்மையில்லாக் காட்சிகளும் புகுத்தப்படல்
★ யதார்த்த வாழ்வைக் காட்சிப்படுத்தலைக் கைவிட்டு போதனை செய்தலை மட்டுமே கையில் எடுத்தல்
★ வசனங்களை நீட்டி உவமான உவமேயங்களில் பேச வைத்தல்.

இவ்வாறு இன்னும் பல விடயங்கள் தமிழ் சினெமாவில் புரிதல் இன்றி காட்சிப்படுத்தி ரசனை உள்ள வாசகனை ஏமாற்றி விடுகிற சந்தர்ப்பங்களை நிறையவே சொல்லலாம்.

மிக அண்மையில் ஜீவநதி வெளியீடாக வெளி வந்திருக்கும் இ.சு.முரளிதரனின் தமிழ் சினிமாவின் பார்வையில் ஈழம் எனும் தொகுப்பு நூலில்வேறு வேறான 16 தலைப்புகளில் ஆய்வு முயற்சிகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இ.சு.முரளிதரனின் இலக்கிய முயற்சிகளில் இதுவொரு வித்தியாசமான எண்ணங்களை அள்ளித் தந்திருக்கிறது.

நாமெல்லாம் சிறுவர்களாக இருந்த காலங்களில் தொலைக்காட்சியில் திரைப்படங்களைக் கண்டு களிக்கின்ற அனுபவங்கள் ஆரம்ப கட்டங்களாகவே இருந்துள்ளன. பொதுவான இடமொன்றில் மேசை வைத்து விடிய விடிய திரைப்படம் காண்பிப்பார்கள். பல ஊர்களில் இருந்தும் குழந்தைகள், சிறுவர்கள் முதல் கிழவன் கிழவிகள் வரை படம் பார்த்து மகிழ்வார்கள். அப்போதெல்லாம் யார் நடிகன்? எத்தனை சண்டை? எத்தனை பாட்டு? கதாநாயகன் சாகிறானா? என்பன போன்ற மூன்றாம்தரச் சிந்தனைகளே மனச்சிறைகளில் உலவி வந்திருக்கின்றன.

ஆனால், தற்போது ஒரு படத்தைப் பார்க்கும்போது யார் இயக்குநர்? யார் ஒளிப்பதிவாளர்? யார் இசையமைப்பாளர்? யார் ஒப்பனையாளர்? யார் கலை? என்ற விரிபுபடுத்தலோடு வாசகனின் புரிதல் அறிவுமயப் படுத்தப்படுகிறது. இவை பற்றிய புரிதல்களைத் தனது இலகு மொழி கொண்டு இனிமையாகத் தந்து விடுதல்களாலேயே இ.சு.முரளிதரனின் வெற்றியும் தங்கியிருந்திருக் கிறது.

தமிழ்த் திரைப்படத் தலைப்புகள் - ஒரு குறும் பார்வை எனும் கட்டுரை யோடு தொகுதி ஆரம்பமாகிறது. உள்மன இழகல் நம்பிக்கை பற்றிய சிதறல் இதில் நோக்கப்பட்டிருக்கிறது. 1.வடமொழித் தலைப்புகள் 2.இடைச்சொல் இணைந்தவை 3.ஆங்கிலமொழித் தலைப்புகள் 4.இயக்குநர் தனித்துவம் 5.நடிகர் தனித்துவம் 6.பிரபலங்களின் பெயர்கள் 7.வெற்றிப்பட வார்த்தைகள் 8.வித்தியாசமான முயற்சிகள் 9.தலைப்பு மாற்றங்கள் என்று ஒன்பது தலைப்புகளில்தன் சிறு ஆய்வினை மேற்கொண்டிருக்கிறார்.

இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக அவதானிக்கப்பட்ட விதங்களால் வாசகனின் புருவங்களை அவை உயர வைத்து விடுகின்றன.

திரைப்படங்களில் நகலெடுப்பு - கமஹாசனை முன்வைத்து என்ற கட்டுரையில் இந்திய சினிமாவின் பன்மொழிப் பரப்பிலே தனக்கான விம்பத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் ஆளுமையற்ற நிலையில் உலகத் தரமான படைப்பு என்று ஒன்றில் கூடப் பாத்திரப் பங்களிப்பினை நிகழ்த்தாத சூழலில் ஒரு நடிகருக்கு உலகநாயகன் என்று பட்டம் கொடுத்து ஆழ்வார் பேட்டை ஆண்டவா என வழிபாடு செய்கிறார்கள். உலக சினிமா என்ற ரீதியில் கமலஹாசனின் பங்களிப் பினை உயர்த்திப் பேசுதல் மிகை மனோபாவத்தின் விளைச்சலே ஆகும் என்று இ.சு.முரளிதரன் கமலஹாசன் என்ற உன்னத நடிகனுக்கான உண்மையான சாட்டை அடியாக சொல்லியிருக்கிறார்.

ஏனென்றால், கமலஹாசன் என்பவர் திரைக்கலவை ஆளுமையுள்ள திரைக்கலைஞர்தான் என்பதில் எள்ளளவு மாற்றுக் கருத்தும் யாருக்குமே இருக்கவே முடியாது. ஆனால், விரும்பியோ விரும்பாமலோ தனது ஒளிப்படக் கலையின் ஆளுமைகளின் சிலவற்றை வர்த்தக நோக்கம் கருதி இடைச்செருகல் செய்கிற போது அந்தப் படம் அடிபட்டுப் போவது மட்டுமல்லாமல் கமலஹாசனின் திரைக்கலவையின் முழு ஆளுமையும் தொலைந்து போவதையும் யாரும் கண்டுணரலாம்.

நாயகன், ஹேராம் இவ்விரு படங்களிலும் கமலஹாசனின் திரைக்கலவை ஆளுமையை ஓரளவு துருத்திக் காட்டியிருந்தன.

தமிழ் சினிமாவின் பார்வையில் ஈழம் - வணிகமாக்கப்பட்ட வலிகள் - ஈழ அவலங்களை கதை வசனங்களாகவும் வெறும் பாடல் வரிகளாகவும் திணித்து வணிகமாக்கியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிச் செல்கிறது. ஈழத்தின் அவலங்களையும் புலக் காட்சிகளையும் சரியான தகவல்கள் இன்றி திரைப்படமாகிய கன்னத்தில் முத்தமிட்டால் ஆறு தேசிய விருதுகளைப் பெற்றதும் எள்ளல் நகைப்புக்கிடமான ஒரு சம்பவமே! தேசிய விருதினை ஆய்வு செய்வோர் எத்தகைய தேடலின் பிதாமகர்கள் என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. உதாரணமாக யாழ்ப்பாண சுப்பிரமணியம் பூங்கா புவியியலுக்குப் புறம்பாக வேறு ஒரு மாவட்டதில் இருப்பதாகக் காட்சிப்படுத்தியமையினையும் சொல்லலாம்.

தமிழ் திரைப்படங்களில் குறியீடு - ஆழமறியாத ஒரு தேடல் - ஒளிப்பதிவுக் கருவியானது அசையும் வேகம், அதன் திசை என்பவற்றின் அளவு வேறுபாடுகளிலும் ஒரு திரைப்படத்தின் மேன்மைத் தன்மை தங்கியிருக்கிறது. தமிழ் ஒளிப்பதிவுக் கலைஞர்களைப் பொறுத்தமட்டில் புதுமையான படைப்பாளிகள் இல்லாமல் இல்லை. ஆனால், அவர்களின் எண்ணங்களுக்கு ஒளிப்பதிவு செய்வதையோ, காட்சித் துண்ட ஒட்டுதல்களையோ மேற்கொள்ள இயக்குநர்கள் ஒத்துக்கொள்வதில்லை என்பதே உண்மையாகும்.

இ.சு.முரளிதரன் சொல்வது போல பாடல்கள், இடைவேளை, படத்தோடு பொருந்தாத நகைச்சுவைப் பகுதி பாலுணர்வைத் தூண்டும் நடன அசைவுகள் அனைத்தையும் தவிர்த்துவிட்டு வணிக வெற்றியை மட்டும் மையப்படுத்தாது அழகியல் நுணுக்கத்தோடு தமிழ்த்திரைப்படங்கள் வெளிவரும் போது உன்னத குறியீடுகள் இடம்பெறும் வாய்ப்பு உருவாகும். அதுவரை சராசரிக் குறியீடுகளைச் சகித்துக் கொள்ள வேண்டியது தமிழர்களின் தலைவிதியாகும் என்பதை முழுமையாக நாமும் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

மணிரத்தினம் சினெமாவில்- நிசமாந்தர்களின் நிழல் - தான் அறிந்த நிசமாந்தர்கள் அல்லது தான் படித்த புராண இதிகாச சம்பவங்கள் அல்லது போரியல் வாழ்வின் நிசத்தில் ஒரு கற்பனைச் சித்திரம் என்று திரைப்படமாக்கியவர்களில் இயக்குநர் மணிரத்தினம் முதன்மையானவர். ஆரம்ப காலங்களில் பகல்நிலவு, மௌன ராகம், இதயக்கோயில் என்று ஜனரஞ்சகமான திரைப்

**ஈழத்தின் அவலங்களையும் புலக் காட்சிகளையும் சரியான தகவல்கள் இன்றி திரைப் படமாகிய கன்னத்தில் முத்தமிட்டால் ஆறு தேசிய விருதுகளைப் பெற்றதும் எள்ளல் நகைப்புக் கிடமான ஒரு சம்பவமே!**

படங்களை தந்த இயக்குநர் மணிரத்தினம் நாயகன் திரைப்படத்தோடு அவரின் கதை, திரைக்கதை வடிவம் மாற்றம் பெறுகிறது.

வரதராச முதலியார் வாழ்வு சரிதம் நாயகன் ஆகவும், மகாபாரதக் கர்ணனின் வாழ்வு சரிதம் தளபதி ஆகவும், சத்தியவான் சாவித்திரிக் கதையயினை ரோஜா ஆகவும், எம்.ஜி.ஆர் - கருணாநிதி வாழ்வு சரிதம் இருவர் ஆகவும், பால்தகரேயின் வாழ்வு சரிதம் மும்பாய் ஆகவும், திருபாய் அம்பாணியின் வாழ்வு சரிதம் குரு ஆகவும் இராவணனின் வாழ்வு சரிதத்தோடு சந்தனக்கடத்தல் வீரப்பனின் வாழ்வு சரிதத்தையும் கலந்து இராவணன் ஆகவும் திரைக்காவியமாக்கியிருந்தார் மணிரத்தினம். இவைபற்றியெல்லாம் உண்மை பொய் என்பதற்கப்பால் திரைக்கதையில் சில மாற்றங்கள் எவ்வாறு செய்ய நேர்ந்தது என்ற சம்பவங்களையும் துல்லியமாக ஆராய்ந்திருக்கிறது.

இப்படியாக கனதியான முயற்சிகளில் கால்கோள், கனவுருவ வரைபுகளால் கருத்தியல் திருட்டு. கொண்டாட்ட தேவதை, உண்மையின் பன்முக வடிவம், ஈரத்தின் வசீகரம் சுவற வைத்த ஈரானிய சினெமா, புனிதம் தகர்க்கும் புறஹந்த களுவற, நகரும் படிமங்களில் நாகேஷ், வர்மக் கலையும் தமிழ் சினெமாவும், அகிலத் தரமான ஆப்கானிஸ்தான் சினெமா, தெவிட்டாத திரைப்படிமம் என்றவாறாக ஆங்கில, ஆப்கானிஸ்தான், சிங்கள, யப்பானியத் திரைப்படம் என்று பல்மொழித் திரைப்படங்களையும் இ.சு.முரளிதரன் ஆய்வு செய்த விதம் சினெமா பற்றிய ஓர் அறிவு சார் புலமைத் தூண்டலை தூண்ட வல்ல கட்டுப்போக்கினைத் தந்து போகின்றன. தவறவிட்டு விட முடியாத பல அம்சங்கள் நிறைந்த நூல் இது. இந்த நூல் இ.சு.முரளிதரனின் தேடல்களில் இன்னுமொரு படிமமாகத் திகழும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— சிறுகதை —

# விட்டில்கள்...

பொலிகையூர் சு.க. சிந்துதாசன்

வீசும் காற்றுக்கு ஏற்ப தன் அலைக்கரங்களை அசைத்தபடி காலைப் பொழுதில் மிகவும் எழில் பூண்டிருக்கும் அந்த நந்திக்கடல் அன்றைக்கு ஏதோ முடிவிலியாய்... நிகழும் விபரீதத்தை உணர்ந்து வருந்துவது போல் அமைதியாய் காட்சியளித்தது. அதை அண்மித்தும் பரந்திருந்த விடத்தற்காடும் கூட வியப்பளிக்கும் வனப்புக்குப் பதிலாக வசந்தம் தொலைத்த வாழ்வின் வேதனையை உட்கொண்டு விரக்தியின் வடிவாய் காணப்பட்டது. ஏதேதோ இழந்ததையும் ஏதேதோ ஆகப்போவதையும் உணர்த்துவதாய் அப்பகுதி ஒரு மயானமாய் காட்சியளித்தது.

நந்திக் கடலுக்கும் விடத்தற் காட்டுக்குமிடையிலான ஒரு ஆலமரத்தின் கீழுள்ள ஒரு பதுங்கு குழியில் அமலா தன் தோற்றத்தை மாற்றிக் கொண்டிருந்தாள். அவளது பரபரப்பு எதையோ பெறப்போவதையும் சேர்த்துப் பிரதிபலித்தது.

ஏற்கனவே தன் தோற்றத்தை மாற்றியிருந்த நளினி அமலாவின் அக்காவுடன் சேர்ந்து மற்றொரு பதுங்கு குழியில் நிற்கிறாள். "கெதியா வா; கெதியா வா" எனக் குரல் கொடுக்கிறாள். அமலாவின் அக்கா "வாறனக்கா முடியுது" எனப் பதிலளித்த அமலா குறித்த பதுங்கு குழியிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் நளினியும் அமலாவின் அக்காவும் அங்கு வந்திருந்தார்கள்.

அக்கா அமலாவையும் நளினியையும் மாறி மாறி ஏற இறங்க பார்க்கிறார். பெண்களுக்கேயுரிய சாதாரண உடையில் நகை நட்டுக்களுடன் அவர்களைப் பார்க்கும் போது அவர் பிரமித்துப் போனார். அதற்கும் காரணம் இருக்கத்தான் செய்தது. சீருடையில் அவர்களைப் பார்த்து பழக்கப்பட்ட அக்காவுக்கு இந்தத் தோற்றம் வித்தியாசமாகத்தான் இருந்தது.

அமலவும் நளினியும் வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். எனினும் போராளிகளாக ஒரே கடமையில் இருந்து நெருக்கமாகி இணைபிரியா நண்பிகள் ஆனவர்கள். அமலா எப்போதுமே தான் ஒரு பொறுப்பாளர் என்ற விதமாய் ... நளினியுடன் நடந்ததில்லை. தன் தங்கையாக எண்ணியே அவளை வழி நடத்தி வந்தாள். நளினி தவறிழைக்கும் போதெல்லாம் அன்பால் நளினியை திருத்துகின்ற குறித்த பாணி அமலா மீதான பற்றையும் பாசத்தையும் நளினிக்குத் கூட்டிற்று. அது போல அமலாவின் அக்காவும் நளினியைத் தன் சொந்தத் தங்கையாகவே கருதினார்.

இரவு நடந்த பெருஞ்சமரில் கலந்து கொண்ட அமலாவும் நளினியும் காலையிலேயே அமலாவின் அக்காவைச் சந்தித்திருந்தனர். " ஏய் அமலா என்னடி நடக்குது இங்கை?" " ரெண்டு பேரும் என்னோடை வாங்கோ" "இனியொண்டும் செய்யேலாது நாங்கள் ஆமியிட்டைப் போவம்" தன் முடிவைத் தெரிவித்த அக்கா தங்கைகளின் பதிலை எதிர்பார்க்காதவளாய் இருவரின் கைகளையும் இறுகப்பிடித்தபடி குறித்த பதுங்குகுழிகள் இருந்த இடத்துக்கு இழுத்து வந்திருந்தார்.

இரவைத் தின்றிருந்த குறித்த பேரொலி ஓய்ந்து அவ்விடத்தில் நிலவிய நிசப்தம் ஒருவித பீதியை இவர்களில் மட்டுமல்ல நந்திக்கடல் .... விடத்தற்காடு... என அனைத்திலும் எறிந்திருந்தது. இவ்விதம் ஏற்பட்ட பீதியின் மத்தியிலும் பாதுகாப்பாய் படையினரிடம் சரணடைந்து விட வேண்டும் என்ற ஆதங்கமே அவர்களைத் துருத்திக் கொண்டிருந்தது.

" அக்கா பயமாய் இருக்கக்கா" நளினியின் குரல் தழு தழுத்தது. பயத்தை வெளிக்காட்டாதவளாய் " இதுக் கெல்லாம் பயந்தா...?" அமலா பதிலளிக்கிறாள். "ஒண்டுக்கும் யோசிக்காம பைகளை எடுங்கோ" என இருவருக்கும் கட்டளையிட்டு இருவரின் வாதப்பிரதிவாதங்களையும் முடிவுக்கு கொண்டு வந்தார் அமலாவின் அக்கா.

மூவரும் தமது கைப்பைகளை எடுத்துக் கொள்ள அமலா பதுங்குகுழி வாசலுக்கு வந்து வெளியே அவதானிக்கிறாள். எங்கும் மயான அமைதி. குருவிகள் ... பறவைகள்... விலங்குகள்... பிணங்களின் வாடை மட்டும் முக்குத் துவாங்களினூடாகத் உயிர்வரை பரவியது. ஆனாலும் இவர்களைப் போல திக்கற்றவர்களாய் .... சற்றுத் தொலைவில் ஒரு சிலர் வெள்ளைக் கொடிகளுடன் படையினரிடம் செல்வதற்கு தயாராகிக் கொண்டிருந்தனர். "அவர்களுடன் சேர்ந்து போவம்" என அமலா கூற " இல்லை வட்டுவாகல் பக்கம் போவம்" என மீண்டும் தன் வாதத்தை ஆரம்பித்தாள் நளினி. " இங்கயே இருப்பம் ; ஆமி வந்து பிடிக்கட்டும்" என அமலாவின் அக்கா கூறுகிறார். இவ்வாறு ஒருவருக்கொருவர் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருந்த குறித்த கணத்தில் மூவருக்கும் பின்புறமாக மிக அருகில் ஒருபெரிய வெடியோசை ஒரே நெருப்பும் புகையுமாய்... அந்த விடத்தற்காடு எரியத் தொடங்கியது.

இனி இங்கே இருப்பது பாதுகாப்பல்ல எனக் கருதிய அமலாவின் அக்கா இருவரையும் ஒவ்வொரு கையில் பிடித்து இழுத்துக் கொண்டு சற்றுத் தொலைவில் கூடி நின்றவர்களிடம் ஓடுகிறார். அவர்கள் நின்ற இடத்தை அடைந்தபோது சற்று சுமை குறைந்தது போலான ஒரு உணர்வு ஏற்பட்டிருக்க வேண்டும். அமலாவின் அக்கா பெருமுச்செறிந்தார். " ம்... பார்ப்பம்..." என்ற அக்கா மீண்டும் தங்கைகளைப் பார்த்துக் கொள்கிறார். அந்தப் பார்வையிலிருந்து ஏதோவொரு பயவுணர்வு அக்காவிடம் இருப்பதைத் தங்கைகள் உணரத் தவறவில்லை.

"தாமதிக்க இது நேரமில்லை; உடனே புறப்படுவோம்" எனக்கூறிய அக் கூட்டத்திலிருந்தோரில் ஒருவரின் வழிகாட்டுதலில் உயிர்காக்கும் அவர்களது பயணம் தொடர்கிறது. ஒட்டம் பெரு நடையாய் படையினரைத் தேடி அவர்கள் புறப்பட அமலாவின் அக்காவின் காலில் ஒரு பெரு முள்ளு குத்துகிறது. "ஆ...; அம்மா...." இவ்வாறு கத்திய அக்காவுக்கு முள் குத்திய வலியை விட குறித்த தடையால் ஏதோ நிகழப் போவதை எண்ணி ஏற்பட்ட சஞ்சலம் அதிகமாயிருந்தது.

சற்றுத் தூரம் நடந்து ஒரு வெட்டையில் இருந்த சிறிய வெள்ளப்பரப்பை கடந்து போகையில் " ஆமி நிற்பது தெரியுது" எனக் கூட்டத்திலிருந்தவர்கள் ஒருவருக்கொருவர் கதைத்துக்கொள்கிறார்கள். மகிழ்வு ,பயம் இரண்டும் கலந்த ஒரு உணர்வு அனைவரையும் ஆட்கொள்கிறது.

எம்மைப் பிடிப்பார்களா? சுடுவார்களா? பிடித்தால் எங்கு கொண்டு செல்வார்கள்? எம்மை இணங்காணுவார்களா? யாரேனும் காட்டிக் கொடுப்பார்களா? பல கோணங்களில் அமலாவின் மனம் கேள்விகளைத் கேட்கிறது. எது எப்படியிருப்பினும் அக்கா சொல்வதைச்செய்வம் என்றமுடிவோடு நளினியின் கையைப் பற்றுகிறாள். அமலாவின் மனநிலையைப் புரிந்த வளாய் நளினியும் அமலாவின் பற்றுகையை ஏற்கிறாள்.

அந்தக் கணத்தில் கூட்டத்தினரின் முன்னேவந்துவிழுகிறது எங்கிருந்தோ ஏவப்பட்ட இனந்தெரியாக் குண்டு அவ்விடத்தைப் புகை மூடுகிறது. தப்பியோர் ஓலமிட்டபடி சிதறியோடுகிறார்கள்.

சில நிமிடங்களின் பின் புகைய கன்ற போது மாண்டவர்கள் போக படையினரின் வாகனங்களில் ஏற்றப்பட்டோரே மீண்டவர்கள் ஆயினர். அங்கே அமலாவின் அக்காவும் வாகனத்தில் ஏற்றப்பட்டார்.

வாகனம் கரும்புகையை உமிழ்ந்தபடி விரைந்து கொண்டிருந்தது. அக்காவின் உதடுகள் "அ...ம..லா, ந...ளி...னி" என்ற பெயர்களை மாறி மாறி உச்சரித் துக் கொண்டிருந்தது.

★★★

"அக்கா பயமாய் இருக்கக்கா" நளினியின் குரல் தழு தழுத்தது. பயத்தை வெளிக்காட்டாதவளாய் "இதுக் கெல்லாம் பயந்தா...?" அமலா பதிலளிக்கிறாள். "ஒண் டுக்கும் யோசிக்காம பைகளை எடுங்கோ"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போனவர்களின் வருகை



தொடர் கதை

05

● தொல்புரம் சி. கதிர்காமநாதன்

புதுமணம் வீசிக் கொண்டிருந்தது. எனக்குக் கூட வீட்டைப் பார்க்க மலைப்பாகத் தான் இருந்தது. வீட்டிற்கு எவ்வளவு வேலை செய்திருக்கிறார்கள். கேற்றில் இருந்து வீட்டுக்கு உள்ளே போகும் வரை காலில் மண்பிடியாத நிலை. தரையில் கால் வைக்க கூசின. வாசலுக்கு முன் வட்டவடிவமான நீர்த்தேக்கம். நடுவே இருந்த குழாயில் இருந்து தண்ணீர் நாலாபக்கமும் அலங்காரமாய் பீய்ச்சி அடித்துக் கொண்டிருந்தது.

உள்ளே விலை உயர்ந்த சோபாக்கள், மேசைகள். தலைக்குமேலே மின் விசிறிகள். அலங்கார விளக்குகள். புதியதொலைக்காட்சிப் பெட்டி, டெக் ரேடியோ. "வாங்கோ சிவா அண்ணை" இப்பதான் எங்கட ஞாபகம் வந்ததோ? அண்டைக்குச் சொன்னவர். சிவா அண்ணையைக்கண்டனான் கதைக்கமுடியவில்லை என்று. இதிலை இருங்கோ. இவர் வந்த பிறகுஎடுத்தது. இருக்க நல்ல சுகமாய் இருக்கும். அவர் குளிச்சுக் கொண்டிருக்கிறார். நெடுக குளிப்பு தான். இந்தக் 'கிளைமேற்' கொஞ்சம் அவருக்கு ஒத்து வருகுதில்லை... ஆங்... இந்தாங்கோ ஜேர்மனியில இருக்கிற இவற்ர தங்கச்சியின்ர கலியாண அல்பம் இருக்கு இவரும். அங்க போட்டு வந்தவர். பாருங்கோ வாறன்."

மங்களம் அல்பங்களை தந்து விட்டு உள்ளே போய் விட்டாள்.

சே... ஆசையாய் பாசமாய் கதைக்கப் போனால்.... எல்லா வீடுகளிலும் இப்படியானதொரு தண்டனையைக் கொடுத்து விடுவார்கள்.

"அல்பத்தைப் பாருங்கோ"

சடச்சுட ரீ வந்தது. அது வந்த கையோடு கந்தசாமியும் வந்து விட்டார். வெளிநாட்டு வாசம் அவரில் தெரிந்தது. -உடம்பில்... நிறத்தில்... கழுத்தில் தொங்கிய வடத்தில்... பேச்சில், சிகரெட் வாசனையில்.

"அண்ணை எப்படியிருக்கிறியள்?"

"சுகத்துக்கு என்ன குறைச்சல்? ஏதோ காலம் போகுது."

"நான் பதினைஞ்சு நாள் லீவில வந்தனான். கனவேலை பார்க்க வேண்டியிருக்கு. ஒரே ரன்னிங் தான். பிஸி வேர்க்"

"என்ன மாதிரி இஞ்ச வந்து இருக்கிற பிளான் இருக்கோ?"

"இப்போதைக்கு இல்லை. ரண்டுபெடியள் இஞ்ச படிக் கிறாங்கள். மற்றவனை 'யூக்கேயில்' இப்பதான் விட்டிட்டு வந்தனான். அவங்களையும் தங்கட காலில நிக்க வைக்க வேணுமெல்லே?"

கந்தசாமி என்னைப் பார்த்துச் சிரித்தார்.

கையில் சிகரெட் புகைந்து கொண்டிருந்தது.

பாடசாலைக் கட்டட வேலைக்கு காசு கொடுத்தது, கோயில் திருப்பணிக்கு காசு கொடுத்தது, கால் படாமல் இருந்த காணியை துப்பரவாக்கியது, தெரிந்தவர், உறவினர் என்று வீடு வந்தவர்களில் கஸ்ரம் என, இனம் கணப்பட்டவர்களுக்கும் காசு....

இவைகளைப் பற்றியெல்லாம் 'பராசக்தி வசனப் பாணியில்' சொல்லி விட்டு -சிகரெட்டை ஆழமாக இழுத்தார்.

"சிவாண்ணை வெளிநாட்டிலிருந்து வந்திட்டன். என்று கேள்விப்பட்ட உடனை சனங்கள் எப்படி வருகினமோ தெரியாது....

....அங்க நாங்கள் எவ்வளவு கஷ்ரப்பட்டு உழைக்கிறம் பதினைஞ்சு வருசத்திற்குப் பிறகு இப்பதானே இஞ்ச வந்திருக்கிறன்..... இஞ்சத்த சனம் எண்ன்னெண்டால் வீடு வாசல்களை கட்டிக் கொண் டிருக்கினம். பார்க்கத் தெரியுது. ஆக்களில ஒரு மாற்றத்தையும் காணேல்ல. அதே பழைய குணம் தான்...."

கந்தசாமி சிரித்தார்.

வெளியே யாரோ கூப்பிடும் சத்தம். கந்தசாமி மங்களத்தைக் கூப்பிட்டு வெளியே பார்க்கச் சொன்னார். வெளியே போன மங்களம் உடனே திரும்பி வந்து தயங்கி நிற்பது தெரிந்தது.

(அடுத்தவாரம் தொடரும்)

# இராசி பலன்



21.08.2013 - 27.08.2013




### அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

**நம்பிக்கையுடன் பணிபுரிந்து, செல்வ வளம் பெறுகின்ற, மேஷ ராசிக்காரர்களே!**

முருகப்பெருமானின் நல்லருள் பலமாக துணைநிற்கும். சிரமம் அணுகாமல் தவிர்க்கலாம். குடும்ப உறுப்பினர், ஆதரவு மனப்பாங்குடன் செயல்படுவர். பூர்வ சொத்தில் பெறுகிற, வருமானத்தின் அளவு கொஞ்சம் குறையும். குடும்ப ஒற்றுமை சீராகும். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பினால், நடைமுறையில் பெறுகிற நன்மைகளை பாதுகாப்பது அவசியமாகும். பணியாளர்கள், ஒரு முகத்தன்மையுடன் செயல்படுவதால், பணி இலக்கு நிறைவேறும்.




### கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

**பிறரை இனிய சொல், செயலால் வசீகரிக்கின்ற, ரிஷப ராசிக்காரர்களே!**

மனதில் உற்சாகமும், செயல்களில் புதிய பரிமளிப்புத் தன்மையும் உண்டாகும். பொது நலப்பணியிலும், ஒரளவு ஆர்வம் கொள்வீர்கள். வீடு, வாகனத்தில் பயன்பாட்டு வசதி, திருப்திகரமாக இருக்கும். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கித்தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து, உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பு, சலுகைப்பயன் பெறுவர்.




### மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**பரந்த மனப்பான்மையுடன், மற்றவர்க்கு உதவும், மிதுன ராசிக்காரர்களே!**

வாழ்வியல் நடைமுறையில் பெறுகிற நன்மைகளை, கூடுதல் அக்கறையுடன் பாதுகாப்பது அவசியம். பகைமை குணம் உள்ளவரிடம், எதிர்வாதம் பேசாமல் விலகுவதால் சிரமம் தவிர்க்கப்படும். குடும்ப உறுப்பினர் ஒற்றுமை குணத்துடன் நடந்து கொள்வர். உறவினர்களாலும், உதவி கிடைக்க அனுகூலம் உண்டு. உடல் நலத்திற்கு, சிறு அளவிலான மருத்துவசிகிச்சை தேவைப்படும். இல்லறத்துணை குடும்ப நலன் சிறக்க, நல்ல ஆலோசனை சொல்வார்.




### புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

**தடைக்கற்களை, படிக்கற்களாக மாற்றி, வாழ்வில் முன்னேற்றம் பெறுகிற, கடக ராசிக்காரர்களே!**

பிறரிடம் பேசுவதில், நிதானம் பின்பற்ற வேண்டும். வீடு, வாகனத்தில் பராமரிப்பு பணிதேவைப்படும். இல்லறத்துணையின் ஆறுதல் வார்த்தை, மனதில் நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம், அதிக உழைப்பு சராசரி நன்மைகளை பெற்றுத்தரும். பணியாளர்கள் தொழில் நுட்ப அறிவை பயன்படுத்துவது, பணியை எளிதாக்க உதவும். பெண்கள், தெய்வ வழிபாடு நிறைவேற்றுவர். மாணவர்கள், பாதுகாப்பு குறைந்த இடங்களில் செல்லக்கூடாது.




### மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

**சூழ்நிலைகளை உணர்ந்து செயல்புரிந்து, உரிய நன்மை பெறும் சிம்ம ராசிக்காரர்களே!**

சமூக அந்தஸ்து பெற்றவர்களின் அன்பும், உதவியும் அதிர்ஷ்டவசமாக கிடைக்கும். சிலர், புதிய வாகனம் வாங்குகிற முயற்சி நிறைவேறும். புத்திரர் நற்குண, நற்செயல்களால் பெருமை தேடித் தருவர். எதிர் மனப்பாங்குடன், உங்களிடம் பழகுபவரையும், பாசம் மகிழ்வைத் தரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து லாபவிகிதம் கூடும். உத்தியோகஸ்தர், பணியாளர்களை ஊக்கப்படுத்தி, திட்ட இலக்கு நிறைவேற்றுவர். குடும்ப பெண்கள், கணவரின் பாராட்டு, சீரான பணவசதி கிடைத்து.




### உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்

**இனிய அணுகுமுறையால் நற்பெயரை பாதுகாக்கும் கன்னி ராசிக்காரர்களே!**

அடுத்தவரின் ஆடம்பர நடைமுறைகளை பார்த்து, தானும் அவ்வாறு செயல்பட விரும்புவீர்கள். இதனால், சேமிப்பு பணம் செலவு ஆவதும், சிறு அளவில் பணக்கடன் பெறுவதுமான சூழ்நிலை உருவாகலாம். கவனம் தேவை. வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு பின்பற்றவும். உத்தியோகஸ்தர் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவர். குடும்பப் பெண்கள் விதவிதமான உணவு தயார் செய்து, உறவினர்களை உபசரிப்பர்.




### சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**வாழ்வில் நியாய தர்ம குணம் அதிகம் பின்பற்றுகின்ற துலாம் ராசிக்காரர்களே!**

முக்கியமான பணி நிறைவேறுவதில் இருந்த தாமதம் இனி விலகும். தொழிலில் வியத்தகு அளவிலான் முன்னேற்றம் உருவாகும். பிறர் மனம் அறிந்து பேசுவீர்கள். உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும். இல்லறத் துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். அதிக மூலதனத்துடன் தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணிபுரிவீர்கள். குடும்ப பெண்கள், உறவினர் வீட்டு மாங்கல நிகழ்ச்சி நிறைவேற உறுதுணை புரிவர்.




### விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

**மனதில் நற்பண்புகளை நாளும் வளர்த்திடும் விருச்சிக ராசிக்காரர்களே!**

கடந்த காலத்தில், உங்களின் உதவி பெற்று, வாழ்வில் முன்னேறியவர், பொது இடத்தில் உங்களை கண்டும், காணாதது போல நடந்து கொள்வார். நிதானமாக நடத்த வேண்டிய பணி ஒன்று, அவசர கதியில் நிறைவேற்றுகிற நிர்பந்தம் உருவாகும். மனம் தளராமல் செயல்படுவீர்கள். வீடு, வாகன பாதுகாப்பில் கூடுதல் கவனம் வேண்டும். வெளியூர் பயணம் தேவைப்படும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டம் கூடுதலாக மதித்து நடக்க வேண்டும்.




### மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

**இலக்கை அடைய, உறுதியுடன் பணிபுரிகின்ற, தனுசு ராசிக்காரர்களே!**

பேசுவதில் தத்துவமும், ஆன்மிக கருத்தும் நிறைந்திருக்கும். வாழ்வில் கூடுதல் வளம் பெற, புதிய இலக்குகளை நிர்ணயித்து பணிபுரிவீர்கள். உடன்பிறந்தவர்களின் அன்பு, பதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி வளரும். பூர்வ சொத்தில் பெறுகிற பணவரவு, அத்தியாவசிய செலவுகளுக்கு பயன்படும். உங்களுக்கு எதிர்மறையாக செயல்பட்டவர், இடம் மாறிப் போகிற நன்னிலை உண்டு. தேவையான பணஉதவி கிடைக்கும். பணியாளர்கள், திட்டமிட்ட இலக்கு நிறைவேற, முழு மனதுடன் பணிபுரிவர்.




### உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்

**உறவினர்களை மதிப்புடன் நடத்தும், மகர ராசிக்காரர்களே!**

எதிர்வரும் பணிகளுக்காக, நீங்கள் தகுந்த திட்டங்களை உருவாக்குவது அவசியம். வாகன பயணம், சீரான வகையில் அமையும். புத்திரர் விரும்பிய பொருள், அதிக தரம் உள்ளதாக வாங்கித் தருவீர்கள். உடல்நலத்திற்கு, சிறு அளவிலான மருத்துவ சிகிச்சை தேவைப்படும். இல்லறத்துணை, வழி சார்ந்த உறவினர்கள், அதிக அன்பு பாராட்டுவர். பணியாளர்கள், அதிக அக்கறையுடன் பணிபுரிவது சராசரி பலனை பாதுகாக்க உதவும்.




### அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்

**உயர்ந்த லட்சியங்களை, ஏற்று செயல்படுத்தும், கும்ப ராசிக்காரர்களே!**

உங்கள் அருமை, பெருமையை குடும்ப உறுப்பினர் பாராட்டுவர். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், வருமானமும் அதிகரிக்கும். எதிர்ப்பாளரின் தொந்தரவு அணுகாத. சுமுக வாழ்வு அமையும். இல்லறத்துணை குடும்ப நற்பெயரை பாதுகாத்து, உறுதுணையாக செயல்படுவார். தொழில், வியாபாரத்தில் சீர்திருத்த நடவடிக்கையினால் வளர்ச்சியும், உபரி பணவரவும் பெறுவீர்கள். உத்தியோகஸ்தர் சிறப்பாக பணிபுரிந்து, நிர்வாகத்திடம் நற்பெயர் பாராட்டு பெறுவர்.




### பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

**புதுமையை வரவேற்கும் மனம் கொண்ட, மீன ராசிக்காரர்களே!**

தகுதிக்கு மீறிய செயல்களில் ஈடுபடக்கூடாது. வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் குடும்பத்தின் சூழ்நிலை உணர்ந்து நடந்து கொள்வார். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவு வகை உண்பதை தவிர்க்கவும். எதிரியின் கெடு செயலை, மாற்று உபாயத்தால் சரி செய்ய வேண்டியதிருக்கும். இல்லறத்துணை, உங்களின் கருத்துகளை எதிர்மறையாக புரிந்து [illegible] கிரகநிலை உள்ளது. தொழில், வியாபாரத்தில் கூடுதல் அக்கறையுடன் பணிபுரிவதால் [illegible] பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட நேரிடலாம் [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகில் எவரும் செய்ய முடியாத சாதனை ஒன்றைச் செய்து விட்டுச் சாதாரண மனிதராக உலாவருகிறார் 'முலாய்' என்று அழைக்கப்படுகின்ற யாதவ் பயேங். அசாம் மாநிலத்தைச் சேர்ந்தவர். அப்படி என்னதான் இவரின் சாதனை?

தனி ஒரு மனிதராக 1360 ஏக்கரில் காடொன்றை உருவாக்கிப் பராமரித்து வருகிறார். 1979 இல் பிரமபுத்திரா நதியோரமாக நிறைய பாம்புகள் மற்றும் ஊர்வனவும் இறந்து கிடந்தன. அதற்குக் காரணம் காடழிப்பும், வெப்பமிகுதியும் என்று கண்டறியப்பட்டது. இந்த நிலையில் அசாம் மாநிலத்தில் ஜோர்ஹார்ட் என்ற இடத்தில் இருந்த மணற்பகுதியில் மரங்களை நட்டால் வெப்பத்தைக் குறைக்கலாம் என்று யாதவ் நினைத்தார். தனது எண்ணத்தை மகஜர்களாக அரசுக்கு அனுப்பிவைத்தார். அவரின் இடைவிடாத போராட்டத்தால் அரைகுறை மனதோடு வந்த அரச அதிகாரிகள் ஒப்புக்கு அங்கு மரக்கன்றுகளை நட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். ஆனால் அது மணற்பகுதி என்பதால் மூங்கிலைத் தவிர வேறெந்தத் தாவரமும் அங்கு வளர்வதற்கான சாத்தியம் இல்லையென்று அரச அதிகாரிகளுக்கும் யாதவுக்கும் நன்கு தெரியும்.

ஆனால் யாதவ் சோர்ந்து விடவில்லை. மணலைப் படி வளமான மண்ணாக மாற்றுவதென்று யோசித்தார். அப்போதுதான் அவருக்குத் தங்கள் ஊரில் மணலை வளமாக்கும் சிவப்பு எறும்புகளின் ஞாபகம் வந்தது. ஊரிலிருந்து நிறைய எறும்புகளைப் பிடித்து வந்து மணற்பகுதியில் விட்டார். அவர் நினைத்தது போலவே எறும்புகள் மணலை வளமான மண்ணாக மாற்றின. மூங்கில் மாத்திரமல்லாமல் ஏராளமான மரங்களை நட்டு, பராமரித்தார். கிட்டத்தட்ட 30 வருட உழைப்பால் இன்று 1360 ஏக்கர் பரப்பளவில் செழிப்பான காடாக அந்த மணற்பகுதியை யாதவ் மாற்றிவிட்டார்.

எனினும் இப்படியொரு காடு உருவான விடயம் அரசுக்கோ, அதிகாரிகளுக்கோ தெரியாது. 2008 ஆம் ஆண்டு காட்டு யானைகளைத் துரத்திச்சென்றபோதே இந்திய வரைபடத்தில் இல்லாத இந்தக் காட்டைப் பார்த்து வனத்துறையினர் ஆச்சரியமடைந்தனர். பின்னர் யாதவின் செயலை அறிந்து இந்திய அரசு அவரைப் பாராட்டிக் கௌரவித்துள்ளது. இப்போதும் அந்தக் காட்டின் காவலனாக புதிய மரங்களை நாட்டியபடி வலம் வந்துகொண்டிருக்கிறார் இந்த மதிப்புக்குரிய இயற்கையின் நண்பன்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரசிகர் தற்கொலை! விஜய் வேதனையில்......



விஜயின் தலைவா படம் தமிழகத்தில் வெளியாகாததால் அவரது ரசிகர் ஒருவர் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். கோவை மாவட்டம், காசிநஞ்சயகவுண்டன் புதூரை சேர்ந்த விக்ரம் என்ற விஷ்ணுகுமார் (வயது-20) என்ற விஜயின் தீவிர ரசிகரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர் ஆவார்.



தமிழகத்தில் தலைவா படம் வெளியாகாததால் விஷ்ணுகுமார் மிகவும் மனமுடைந்து காணப்பட்டார். நண்பர்களிடம் பேசிவிட்டு இரவு வீட்டுக்கு சென்ற விஷ்ணுகுமார் வீட்டில் யாரும் இல்லாத சமயம் பார்த்து தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இதனை அறிந்த நடிகர் விஜய் வேதனையில் ஆழ்ந்துள்ளார். இது குறித்து விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில்- கோவை துடியலூர் பகுதியை சேர்ந்த விஷ்ணுகுமார் என்ற இளைஞர் தலைவா படம் பார்க்க முடியவில்லை என்ற வேதனையில் தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தியை கேட்டதும் துடித்துபோய்விட்டேன்.

வாழ வேண்டிய ஓர் இளம் தளிர் இன்று சருகாகி கிடக்கிறது. என் வாழ்க்கையில் அதிகபட்ச வேதனை தினமாக இதை கருதுகிறேன். விஷ்ணுகுமாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் சொல்ல வழி தெரியாதவனாய் தவிக்கிறேன்.

தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு ரசிகனும் எனது சகோதரன். உங்களை நான் நேசிப்பது போல் நீங்களும் என்னை நேசிப்பது உண்மையென்றால் இனிமேல் இப்படி ஒரு நிகழ்வு எங்கும் நடக்கக்கூடாது என்று அன்போடும், கண்டிப்போடும் உங்கள் சகோதரனாய் கேட்டுக் கொள்கிறேன்-என்று விஜய் தெரிவித்துள்ளார்.

# ஆறிப்போகும் பிரியாணி



கார்த்தி, ஹன்சிகா, பிரேம்ஜி மற்றும் பலர் நடிக்க, வெங்கட்பிரபு இயக்கி வந்த படம் 'பிரியாணி'. யுவன் இசையில் வெளிவரும் 100 ஆவது படம் இது. ஸ்டுடியோ க்ரீன் நிறுவனம் இந்தப் படத்தினைப் பிரம்மாண்டமாகத் தயாரித்திருக்கிறது. இந்தப்படத்தின் இசை வெளியீட்டு விழா ஒகஸ்ட் 15 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்தது. ஆனால், 'பிரியாணி' படத்தின் பணிகளை மிகவும் மெதுவாகவே நகர்த்தி வருகிறாராம் வெங்கட்பிரபு.ஒகஸ்ட் மாத இறுதியில் இசையையும், செப்ரெம்பர் மாத இறுதியில் படத்தினையும் வெளியிட இருக்கிறார்கள். செப்ரெம்பர் 6ஆம் திகதி சிவ கார்த்திகேயன் நடித்துள்ள வருத்தப் படாத வாலிபர் சங்கம், விஷால் நடித்துள்ள மதகஜராஜா ஆகிய படங்கள் வெளிவருவது உறுதியாகி இருக்கிறது. சகுனி, அலெக்ஸ் பாண்டியன், ஆகிய படங்கள் கார்த்திக்குச் சறுக்கியுள்ளதால், பிரியாணியையே அவர் பெரிதும் நம்பி யிருக்கிறார்.

# இசைப்புயலின் புதிய அவதாரம்



'ஒஸ்கர்' நாயகன் 'ஏ.ஆர்.ரஹ்மான்'. சமீபத்தில் ரஹ்மா
'வை.எம். மூவீஸ்' என்ற பெயரில் சொந்தத் தயாரிப்பு
நிறுவனம் தொடங்கவிருப்பதாகவும், இசை சம்பந்தப்ப
கதைகளைத் தேர்வு செய்து ஒரு புதிய படத்தை தனது
தயாரிப்பில் உருவாக்க விருப்பதாகவும் தகவல்கள்
கசிந்தன. ஆனால், ரஹ்மான் அந்தச்செய்தியை
உறுதிப்படுத்தவில்லை. இந்தநிலையில் தற்போது
ரஹ்மான், ஈராஸ் நிறுவனத்துடன் இணைந்து ஒரு
ஹிந்திப் படத்தை தயாரிக்கவுள்ளார் என்று
தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தப்படத்தி
கதையையும் ரஹ்மானே எழுதியுள்ளாரம். விரை
இந்தப்படத்தை பற்றிய ஏனைய தகவல்க
வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்

# ஹரிஸின் குத்து



இதுவரை மெல்லிசைப் பாடல்களை மட்டுமே தன்னுடைய இசையில் உருவாக்கிய ஹரிஸ் ஜெயராஜ், முதன்முறையாக குத்துப்பாடலுக்கு இசையமைத்துள்ளார். தனுஷை நாயகனாக வைத்து தன்னுடைய அடுத்த படத்தை இயக்கி வருகிறார் கே.வி. ஆனந்த்.

'ஆரம்பம்' படத்தின் ஒளிப்பதிவாளர் ஓம் பிர காஷ், இந்தப் படத்துக்கு ஒளிப்பதிவு செய் கிறார். இந்தப் படத்துக்காக கம்போடியாவிலும், வியட் நாமிலும் படப் பிடிப்பு நடத்தவுள்ளார் கே.வி.ஆனந்த். வழமை போலவே ஹரிஸ் ஜெயராஜ் தான் இசை .

ஹரிஸ் என்றாலே அவரின் மெல்லிசைப் பாடல் கள் தான் நினைவுக்கு வரும்.

ஆனால், இந்தப் படத்திற்காக தன்னுடைய வழமை யான பாணியில் இருந்து விலகி வித்தியாசமான இசையை உருவாக்கி இருக்கிறாராம் ஹரிஸ்.கே.வி.ஆனந்த் கேட் டுக்கொண்டதற்காக அருமையான குத்துப் பாட்டு ஒன்றுக்கும் கலக்கலான இசையை வழங்கி யிருக்கிறார் ஹரிஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த்ரிஷாவின் விசில்

ஆறு மாதங்களாக நின்று போயிருந்த 'பூலோகம்' படத்தின் படப்பிடிப்பு மீண்டும் தொடங்கியுள்ளது. பிரசாத் லேப் ஸ்ரூடியோவில் கட்சிகளைப் படமாக்கி வருகிறார்கள். வெளிநாட்டு வில்லனுடன் ஜெயம் ரவி மோதுவது போலவும் த்ரிஷா அவரை விசிலடித்து உற்சாகப்படுத்துவது போலவும் காட்சி படமாக்கப்பட்டது. த்ரிஷாவுக்கு விசில் அடிக்க வராததால் உதட்டைக் குவித்து விசில் அடிக்கக் கற்றுக் கொண்ட பின்பே படப்பிடிப்பில் கலந்து கொண்டார்.



# விருந்து வலை

விஜயுடன் இணைந்து ஜில்லா படத்தில் நடித்து வரும் காஜலுக்கு அடுத்தபடியாக புதிய படங்கள் எதுவுமே கைவசம் இல்லையாம்.

இதற்கு காரணம், சம்பளத்தை அதிரடியாக உயர்த்தியது மட்டுமின்றி, நரை முடி நடிகர்களுடன் நடிக்க மாட்டேன் என்று வெளிப்படையாகக் கூறியதுதானாம்.

இதனால் காஜல், சில பெரிய கதாநாயகர்களை விடுதிக்கு வரவைத்து ரகசிய விருந்து கொடுப்பதாகக் கூறப்படுகிறது.இதன் மூலம் வாய்ப்பு கிடைத்துவிடும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கிறாராம்.

# மனைவி தந்த மாற்றம்

இளம் இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் தனது காதலியான பாடகி சைந்த வியை சமீபத்தில் திருமணம் செய்தார். இசையமைப்பாளர் ஜி.வி பிரகாஷ் குமாரும், பாடகி சைந்தவியும் பலஆண்டுகளாகக் காதலித்து வந்தனர்.பெற்றோரின் சம்மதத்துடன் கடந்த மாதம் 27 ஆம் திகதி இருவருக்கும் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தது.

ஒரே துறையில் இருந்தாலும், இருவரும் சினிமா பற்றி அதிகளவு பேசிக்கொள்வதில்லையாம்.

மேலும் திருமணத்துக்கு பிறகு ஜிவியிடம் அதிகளவு மாற்றம் தென்படுகிறதாம். அதாவது, முன்பெல்லாம் இசையமைப்புப்பணியைத் தொடங்கினால் இரவு வெகுநேரம் ஆனாலும் அவர் வீட்டுக்கு செல்லமாட்டார். ஆனால் தற்போதோ, இரவு 10 மணியானதும் மனைவி சைந்தவியிடம் இருந்து போன் வந்து விடுகிறதாம். இதனால் நள்ளிரவுக்கு மேல் இசையமைக்கும் பணியைக் குறைத்துக் கொண்டிருக்கிறார் பிரகாஷ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு

தொகுப்பு : வரு



பெருமெடுப்பில் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட 'எஸ்.எல்.பி.எல். 20 / 20' கிரிக்கெட் தொடர் இந்த வருடம் நிறுத்தப்பட்டமை எல்லோருக்கும் தெரிந்த விடயமே!. போதிய விளம்பர அனுசரணை, உள்ளூர் ரசிகர்களின் ஏகோ பித்த வரவேற்பு ஆகியன கிடைக்காமையே இத்தொடர் நிறுத்தப்பட்டதற்கான முக்கிய காரணங்கள். கோடிகள் புரளும் ஐ.பி.எல். கிரிக்கெட் போட் டிகளைப் போலல்லாவிட்டாலும் உள்ளூர் ரசிகர்களின் அமோக ஆதரவுடன் இந்த வருடம் இரண்டாவது தடவையாகவும் பங்களாதேஷ் பிறீமியர் லீக்கை நடத்தி முடித்திருக்கின்றது பங்களாதேஷ் கிரிக்கெட் சபை.


அபிமான

அரச ஊழியர்களின் உன்னத சேவைக்காக

Sri Lanka Telecom

ஒரே தேசம். ஒரே குரல்.




"அரச ஊழியரான நான், அரச சேவையை அர்ப்பணிப்போட செய்ய முடிந்ததை நினைச்சு மிகவும் பெருமைப்படுறேன். அந்த உன்னத சேவைக்காக வழங்கப்பட்ட SLT 'அபிமான' எனக்கும் கிடைத்தது. அதனால இப்ப எங்கட வீடும் முழுமையடைஞ்சிருக்கு. அதுமட்டுமில்ல Wi-Fi ரவுட்டர் இருக்கிறதுனால, பிள்ளைகளுக்கும் எனக்கும் ஒரே நேரத்தில இன்டநெட் பயன்படுத்த முடியும். அதோட என்னுடைய வேலையையும் பிள்ளைகளின் படிப்பு வேலைகளையும் இலகுவாக செய்ய முடியுது. உண்மையாகவே SLT 'அபிமான' முழு உலகத்தையே எங்கட வீட்டுக்கு கொண்டு வந்தது."

பெருமைக்குரிய அரச ஊழியர்களாகிய உங்களது உன்னத சேவைக்காக, 'அபிமான' SLT புறோட்பேண்ட் நிலையான, தடங்கலற்ற, அதிவேக இன்டர்நெட் வசதி, விஷேட கட்டணம் ரூ. 390/-ற்கு வழங்கப்படுகின்றது. அபிமான பக்கேஜிற்காக Wi-Fi ரவுட்டரானது, அதிவிஷேட விலை ரூ. 1,990/-ற்கு பெற்றுக்கொள்ள முடியும். 1.5 GB பாவனையுடன் மேலும் 500 MB இலவசம்!



www.slt.lk துரித அழைப்பு 1212

BROADBAND

சக்தியளிப்பது Megaline


கிரிக்கெட் ஆஸ்திரேலியாவினால் நடத்தப்படும் 'பிக்-பாஷ் 20 / 20' தொடரும் தொடர்ச்சியாக நடைபெறுகின்றது. வழக்கம்போல இங்கிலாந்து பிராந்தியக் கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் '20 / 20' தொடரும் தடங்கலில்லாமல் நடக்கின்றது. 'கரீபியன் பிறீமியர் லீக் பெருமெடுப்பில் நடத்தப்படுகின்றன. ஐ.பி.எல். போட்டிகளில் சேர்த்துக் கொள்ளப்படாத பாகிஸ்தான் வீரர்களே கிண்ணப் போட்டிகளும் எஸ்.எல்.பி.எல். போட்டிகளைப் போல இதிலும் அதிகளவில் பங்கெடுக்கின்றார்கள்.

உண்மையில், ஒவ்வொரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் இவ்வாறான போட்டிகளை ஒழுங்கு செய்வதற்கான காரணம் என்ன? தங்கள் தேசிய அணிக்காக உள்ளூர் வீரர்களைத் தெரிவு செய்வது தானே முக்கிய நோக்கம். அதனை அவர்கள் உள்ளூர் கழகங்களுக்கிடையில் போட்டிகளை நடத்தியே நிறைவேற்றிக் கொள்ளலாமே! இறுதியில் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டும் அந்த முடிவுக்குத் தான் வந்திருக்கின்றது போலும்! எஸ்.எல்.பி.எல். இற்குப் பதில் 4 மாகாண அணிகள் பங்குபெறும் 20 / 20 போட்டித் தொடரை ஏற்பாடு செய்திருக்கின்றது. இதில் ஏராளமான உள்ளூர் வீரர்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றார்கள். வழக்கம் போல வடக்கு, கிழக்கு வீரர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இத்தொடர் ஓகஸ்ட் 10 முதல் 17 வரை நடைபெறுகின்றது. 7 போட்டிகள் கொண்ட இத்தொடரில் சம்பியனாகும் அணி இந்தியாவில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் லீக் தொடரின் தகுதிப் போட்டிக்குத் தெரிவாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தொடரில் பங்குபற்றும் பஸ்னாஹிர கிறீன்ஸ் அணிக்கு அஞ்சலோ மத்தியுஸ், உதுர யெலோஸ் அணிக்கு டினேஸ் சந்திமால், கந்துரட்ட மரூன்ஸ் அணிக்கு லஹிரு திரிமன்னே, ருகுணு றெட்ஸ் அணிக்கு லசித் மலிங்க ஆகியோர் அணித்தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியைப் போலவே

"சந்தோசம்; சந்தோசம், வாழ்க்கையின் பாதிபலம்" இவ்வாறு நீள்கிறது ஒரு தென்னிந்தியப் பாடல். மனித வாழ்வில் துன்பம் மட்டும் நிறைந்ததே வாழ்க்கை என்று நினைப்பது தவறு. எம்மில் பலர். 'எனக்கு மட்டும் ஏன் இந்தச் சோதனை.. என்று அலட்டிக் கொள்வதைப் பாரக்கின்றோம். சோதனை...?' என்பது ஒருவரை மட்டும் குறிவைத்தோ அல்லது அவரின் செயற்பாடுகளை மட்டும் மையப்படுத்தியோ ஏற்படும் ஒன்று கிடையாது. அதற்கு மனிதர்களைப் போல பாகுபாடு பார்க்கவும் தெரியாது.


மனித வாழ்வில் எல்லோருக்கும் துன்பம் ஏற்படவே செய்கின்றது. அதனை யதார்த்தம் என்று நினைத்துக் கொண்டு அதனையும் தாண்டி வெற்றிப் பாதையை நோக்கி நடக்க நினைப்பவர்களைத் துன்பம் எனும் விஷப்பாம்பு விழுங்கிக் கொள்வது இல்லை. மாறாக அதற்காகப் பயந்து சாகின்றவர்களை அது மிகவும் இறுக்கமாகப் பற்றிக்கொள்கின்றது. துன்பமும் இன்பமும் சேர்ந்ததே வாழ்க்கை. தனியே இன்பம் மட்டுமே வேண்டுமென்றால் அது நல்லதொரு மனித வாழ்க்கையாக இருக்கமுடியாது.

எம்மில் அதிக சகோதரிகள் துன்பங்களைக் கண்டு துவண்டுவிடுவதும் அதன்பின் தங்களினுடைய முயற்சிகளை அடியோடு கைவிட்டுவிடுவதும் வாடிக்கையான விடயங்கள் ஆகிவிடுகின்றன. அதையும் ஏற்றுக் கொண்டு அதற்கப்பால் மீண்டும் முயற்சிக்க அவர்கள் தயாராகவில்லை. சுட்டெரிக்கும் வெயிற்காலம் வந்துவிட்டது என்றால் அதற்கடுத்து குளிர்காலம் வருகிறது என்பதே அர்த்தம். அதே போன்று தான் துன்பங்கள் வருகின்றது என்றால் அதைத் தொடர்ந்து இன்பம் வரும் என்பதையும் எங்கள் சகோதரிகள் நம்பவேண்டும்.

"துன்பம் வரும் வேளையெல்லாம் சிரியுங்க".. என்கின்றது ஒரு பாடலடி. அதற்காக எப்போதும் சிரித்துக்கொண்டிருங்கள் என்பது அல்ல அர்த்தம். துன்பத்தை நினைத்து கலங்கிக்கொண்டிருக்காமல் அடுத்த நகர்வுக்குத் தயாராகுங்கள் என்பதே அதன் அர்த்தமாகும். "வெற்றியைப் போலவே ஒரு தோல்வியும் நல்லதடி. வேப்பம் பூவிலும் சிறு தேன்துளி உள்ளதடி".

வாழ்க்கை ஒருமுறை தான் வரும். அதைச் சரியான முறையில் அழகாக வாழவேண்டியது எங்களின் கடமை யாகும். இனி தோல்விகளைக் கண்டு பயந்துவிடாமல் அதையும் தாண்டி வாழுகின்ற மனோ நிலையை ஏற்படுத்துங்கள். தோல்விகள் தான் வெற்றிகளைப் பிரசவிக்கின்றன என்ற உண்மையையும் ஏற்றுக் கொள்ளுங்கள்.





# நகங்களையும் கொஞ்சம் கவனியுங்கள்

அதிசயங்கள் நிறைந்த எம்முடைய உடலமைப்பில் உயிரற்ற பாகமாகவும் ஆனால் தொடர்ந்து வளர்ச்சியைக் காட்டும் பாகமாகவும் காணப்படுவது நகங்கள் தான். ஆகும். அழகினைப் பேண நினைக்கின்ற பெண்கள் தம்முடைய எல்லாப் பாகங்களையும் அழகுபடுத்திக்கொள்ள நினைத்தாலும் நகங்களை அவர்கள் அதிகமாகக் கண்டுகொள்வதில்லை.

ஆனால் மற்றவர்கள் ஒருவரைப் பற்றி எடைபோடுவதற்கு இந்த நகங்களின் தன்மைதான் உதவுகின்றது என்று கூறப்படுகின்றது. எங்கள் பெண்கள் தான் அவற்றைக் கண்டுகொள்வதில்லையே.. அதனால் இனிமேல் உங்களினுடைய நகங்களை பாதுகாத்துக்கொள்ள உங்களிற்குச் சில அறிவுரைகள்.

நகங்களிற்கு இரசாயன நகப்பூச்சுக்களைப் பாவிப்பதனை இயலுமானளவிற்குக் குறைத்துக்கொள்ளுங்கள். தேவையற்று நகங்களை வளர்க்கின்ற பழக்கத்தை குறைத்துக் கொள்வது ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான ஒரு வழியாகும்.

## புதுயுகத்தைத் தேடி......

**மகளிர் பக்கம்**

தொகுப்பு: ஸ்ருதி

நகங்கள் வளர்கின்ற போது அவற்றை உரிய முறையில் பாதுகாப்பாக வெட்டிவிடுவது அவசியம். முறையற்ற விதத்தில் நகங்கடிக்கின்ற பழக்கத்திற்கு உட்படாமல் இருப்பதும் அத்தகைய பழக்கமிருந்தால் அதனை நிறுத்திக் கொள்வதும் நல்லது. தினமும் நீராடுகின்ற போது நகங்களை உட்புறமாக மட்டுமன்றி வெளிப்புறமாகவும் சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள். இவ்வாறு செய்வதால் நகங்களின் இயற்கை அழகைப் பேணமுடியும். பொதுவாகவே இப்போது சந்தையில் காணப்படுகின்ற இரசாயன நிறப்பூச்சுக்கள் உங்கள் நகங்களிற்கு கொடுப்பதாக நீங்கள் நினைக்கின்ற அழகைவிட இயற்கையாக உங்கள் நகங்கள் கொண்டிருக்கின்ற நிறத்தின் அழகு தனித்துவ மானது. எத்தகைய கலவைகளைச் சேர்த்தாலும் அத்தகையதொரு நிறத்தினைப் பெற முடியாது.

**இயற்கையின் தனித்துவமே என்றும் ஆரோக்கியமும் அழகும்..!!**

# ரெக்லா லோரொப்



கென்யாவின் பிரபல மரதன் ஓட்டவீராங்கனை ரெக்லா லோரொப். 1973 மே 09 ஆம் திகதி நைரோபியின் வடக்கேயுள்ள குரொப்வனியில் பிறந்த இவர் உலகின் மிகவேகமான மரதன் ஓட்ட வீராங்கனையாகக் காணப்படுகின்றார் எனினும் இவர் வறிய குடும்பத்தின் உறுப்பினராகவும் உள்ளார் என்பது பலருக்குத் தெரியாது. இவருடைய இளம்பராயத்தில் இருபத்து நான்கு சகோதரர்களுடன் வளரவேண்டியதேவை காணப்பட்டது. இவரின் தந்தையாரிற்கு ஐந்து மனைவிகள். தன்னுடைய ஏழாவது வயதிலிருந்தே பாடசாலைக்குச் செல்லத் தொடங்கியிருந்தார். சிறுபராயத்திலே நீண்டதூர ஓட்டத்தில் ஆர்வம்மிகுந்திருந்ததால் பயிற்சிகளை மேற்கொள்ளத்தொடங்கியிருந்தார். இதன் பயனாகப் பாடசாலையில் இவரால் சாதிக்க முடிந்தது. தொடர்ந்து இவரின் தாயாரிடமிருந்தும் சகோதரிகளிட மிருந்தும் ஓரளவு ஊக்கு விப்புக் கிடைத்ததால் தனது பயிற்சியைத் தொடர்ந்தார். பல்வேறு விருது களையும் உலக சம்பியன் சிப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியைப் பெறும் வாய்ப் புக்களையும் பெற்றார்.

நியூயோர்க் சிற்றி மரதன் போட்டியில் முதன்முதலில் வெற்றிபெற்ற ஆபிரிக்கப் பெண்மணி இவராவார். இன்னும் திருமண பந்தத்தில் இணையாத இவர் சமூகத்தில் பெண்களின் உரிமைக் காகவும் நல்வாழ்விற்காகவும் பாடுபட்டுவருகின்றார். சமூக அமைப்புக்களை உருவாக்கிச் செயற் பட்டுவரும் இவரை ஐக்கிய நாடுகள் சபை 2006ஆம் ஆண்டு விளையாட்டிற்கான தூதுவராக நியமித்திருந்தது. ஊழலும் குற்றச்செயல்களும் நிறைந்த இடத்திலிருந்துகொண்டும் பெண்களுக்காகப் பாடுபட்டுவருகின்ற ஒரு சாதனைப் பெண்மணியாக உலகஅரங்கில் அறியப்பட்டுள்ளது மட்டுமன்றி அதற்கான மரியாதையையும் பெற்றுள்ளார் ரெக்லா லோரொப்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பம்பல் பரமசிவம்



# நகரும் காணிகள்

> **"அது சரி பெரியப்பா' இது எல்லாத்தையும் நீங்கள் ஏன் வலு 'டிரெயிலா' எனக்குச் சொல்லித் தாறியள்?"**

**வே**லிச்சண்டை, கோழிச்சண்டைகளின்ரை தாற்பரியம் ஆகாஷுற்குத் தற்போது தான் கொஞ்சம் புரியத் தொடங்கியது. வேலிச் சண்டை என்றால் வேலியும் வேலியும் சண்டை பிடிப்பதல்ல. அதே போலக் கோழிச் சண்டை என்றால் கோழியும் கோழியும் சண்டை பிடிப்பதல்ல. சண்டை எண்டால் சண்டை பிடிப்பதல்ல. சண்டைக்குப் போவது போல, சண்டிக் கட்டைக் கட்டிக் கொண்டு திமிறிக்கொண்டு நிற்பது. நாலு பேர் வந்து விலக்குப் பிடித்ததும் விலகிச் செல்வது, அதுதான் வேலிச்சண்டை. கோழிச் சண்டை என்பது ஒரு கோழி களவு போயிருக்கும்; களவு கொடுத்தவர்கள் 'பரியலங்கள்!' என்று திட்டுவதுடன் 'பைற்' ஆரம்பிக்கும்.

கோழி களவு எடுத்தவர்கள் எரிச்சல் தாங்காது திரும்பித் தாக்கத் தொடங்குவார்கள். சண்டை ஆரம்பித்துவிடும்.

சிலவேளை கோழி களவு எடுத்தவர்கள் பம்மிக் கொண்டு 'கம்' மென்று இருந்து விடுவர். கோழி களவெடுக்காதவர்கள் தங்கள் வீட்டைப் பார்த்து, தங்களைத் தான் திட்டித் தீர்க்கிறார்கள் என்ற நினைப்போடு பதில் தாக்குதலில் இறங்குவர். கோழிபிடித்து கறியாக்கியவர்களுக்குப் சாப்பாட்டுக்குச் சாப்பாடுமாயிற்று. கண்ணுக்கு குளிர்ச்சியும் ஆயிற்று. சிலவேளைகளில் கோழி எங்காவது பற்றை வழியே முட்டை இட்டு குறிப்பிட்டளவு முட்டைகள் சேர்ந்ததும், அங்கிருந்தே அடைகாக்கும்.

ஒரு இருபது, இருபத்தொரு நாள்களில் ஆறேழு குஞ்சுகளுடன் அம்மாக் கோழி 'கவர்' கொடுத்து குஞ்சுகளை அழைத்து வருவார். அதற்குள் இங்கு கோழி காணாமற் போன சண்டைகள் ஓய்ந்து, களவு கொடுத் ததாக கருதி முட்டி மோதப்பட்டவரும், ஒற்று மையாகி, இன்னொரு சண்டைக்கான தருணம் பார்த்துக் கொண்டிருப்பர்.

இப்படி கோழிச் சண்டைகள் பலவிதம். ஒவ்வொன்றும் ஒருவிதம். ஆனாலும் ஆகாஷ்க்கு வேலிச்சண்டை ஒன்று பார்க்காதது கவலை தான். ரமேஷ் மாமாவிடம் சென்று பகிர்ந்து கொள்ள ஒரு வேலிச் சண்டையும் இடம் பெறவில்லையே என்ற ஏக்கம். ஆனாலும் 'பெறியப்பாவிடம்' வேலிச்சண்டை என்றால் என்ன? அது எப்படித் தொடங்கும்? எவ்வாறு தொடரும்? முடியுமா? அல்லது முடிவிலியா? என்று தொடராகப் பல கேள்விகள்.

"மகன்! முதலிலை, வேலி எண்டால் என்னெண்டு தெரிய வேண்டும்.... இப்ப மதில் இருக்கிற இடத்தில, முந்தி ஓலையாலை அடைச்சிருப்பம். அந்தத் தடிகளுக்குப் பெயர் 'கதியால்' கதிகால்.....சரியோ?" என்று ஆகாஷைத் கேட்டான். விளங்கின மாதிரியும் விளங்காத மாதிரியும் தலை அசைத்தான். "இரண்டு காணிக்கும் இடையில் எல்லைக்கல்லு இருக்கும்... அதன் மத்தியைப் பிடித்து ஒரு கயிறு 'வலு' இழுவையாகக் கட்டுவம்.

அந்தக் கயிற்றை மத்தியாகக் கொண்டு, ஒரு ஒன்பது அங்குலம் அல்லது ஒரு அடி துரத்தில, கிடங்குகள் கிண்டுவம். ஒவ்வொரு கிடங்கிலையும் ஒவ்வொரு கதியால் 'நடப்' 'படும்'. "ம்..ம்.."

அவனுக்கு விளங்கிறது கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. ரெண்டு எல்லைக் கல்லை நட்டு கயிறு கட்டி கிடங்கு கிண்டி கதியால் நடுகிறதை 'பிறக்ரிக்கலாக்' செய்து காட்டினான். சும்மாவே? ஜேர்மனிக்குப் போற விசயமல்லோ.... .இங்கே இப்பத்தையப் பிள்ளைகளுக்கே, 'இதுதான் வேலிச்சண்டை' எண்டுறது மறந்து போன விசயமாச்சுது....

ஆடி ஆவணியிலை கதியால் நடுகிற வேலை 'ஸ்ராட்' ஆகும். கிடங்கைக் கிண்டையிக்குள்ளை, கிடங்கின் மேற்பக்கம், கயிற்று மத்தியோடை இருக்கும். கிடங்கு உள்நோக்கிப் போகேக்கை மற்றவன்ரை காணிப்பக்கம் பக்கமாக சரிஞ்சு போகும். செங்குத்தாய் கிடங்கு தோண்டுறதில்லை. அந்த கிடங்கு களுக்கை கதியால் நட்டால், வேலிக்காரன், வீட்டுப்பக்கமாக உள்ளே வேலியிருக்கும். ஆனால் முறைப்படி கயிற்று மத்திக்குச் செங் குத்தாக வேலி நிக்கவேணும்....

இது எல்லாவற்றையும் என்ரை பெறா மகனுக்கு 'பிறக்ரிக்கலாக' செய்து காட்டினன். வேலி மற்றவற்றை காணியுக்கை நிக்காமல் வேலி அடைச்சவற்றை காணிப் பக்கமாக நிக்கிற தாலை மற்றக் காணிப் பக்கக் காரனுக்கு வலு சந்தோசமாய் இருக்கும்.


'ஆனால் மாரியிலை ஒரு மழை பெய்த உடனை வேலியை, கதியாலை செங்குத் தாக்கி நிமிர்த்தி, ஒரு உரம் போட வேலி மற்றவற்றை காணியுக்கை ஒரு ரெண்டு மூன்று அங்குலம் இங்காலை போய்விடும். மற்ற மாதிரிச் சொன்னால், அவற்றை காணி ஒரு ஒண்டரை, ரெண்டு அங்குலம் இஞ்சாலை வேலிக்காரன் காணிப்பக்கமாக வந்துவிடும்.

அதோடு சண்டை தொடங்கும். பார்க்கக் கேட்க வலு ரம்மியமாக இருக்கும். 'அது சரி பெறியப்பா' இது எல்லாத்தையும் நீங்கள் ஏன் வலு 'டிரெயிலா' எனக்குச் சொல்லித் தாறியள்?" என்று ஆகாஷ் கேட்டான். "அட! நீதானை இப்ப விடுத்து விடுத்துக் கேட்டுப் போட்டு ..... பாவம் பிள்ளையெண்டு நான் கதியால் நட்டு அது நிமிர்த்திற 'ரெக்னிக்' எல்லாம் காட்டித்தர.... நீ இப்ப என்னைக் கேட்கிறாய் இதையெல்லாம் ஏன் விளக்கமாய்ச் சொல்லுறன் எண்டு ..என்ன...?" அட மகன், உங்கடை அம்மாவின்ர காணியும், உங்கடை 'பெறியம்மா' வின்ரை காணியும் பிரிக்காமல் ஒண்டாய் கிடக்குது. அரைவாசிக் காணியில நாங்கள் அது தான் உன்ரை 'பெறியம்மா' 'பெறியப்பா' வீடு கட்டிப் போட்டம்.

நீங்கள் வந்து காணி பிரிச்சு, எல்லை போடையுக்கை, எப்பிடி போடுறது எண்டு காட்டித் தந்தனான்.... சரி ..சரி... ஒடு... 'பெறியப்பா' ஒருக்கா 'ரவுன்' பக்கம் போயிட்டு வரப் போறன்... அந்தத் துவாயை எடுத்துக் கொண்டு வா... தோளிலை போட்டுக் கொண்டுபோவம். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



14

# இருளின் கதவுகளைத் திறந்தவன்

● ஔண்யன்

**'போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும் நம் வழி நேர் வழியாகட்டும்' என்கிற பாணியில் யூலியன் இந்தச் குற்றச் சாட்டுக்களைக் குறித்தும் மௌனமாகவே இருந்தான்.**

தன்னைக் கொல்ல வந்தவர்களுக்கே 'தண்ணி' கொடுத்து விட்டு அமெரிக்காவிற்கு வந்த யூலியன் தான் அமைதியாக இருப்பது போலவே காட்டிக் கொண்டான். ஆனாலும், அந்த அமைதி ஆபத்தானது என்பதே யூலியனைப் பற்றி நன்கு அறிந்தவர்களுக்குப் புரிந்திருந்தது. யூலியன் ஏதோ ஒன்றைச் செய்யப்போகிறான் என்பதை ஒருவாறு ஊகித்துக் கொண்டாலும் கூட எந்தத் திசையில் அவனது பாய்ச்சல் இருக்கும் என்தோ அவனுக்கு இரையாகப்போவது யார் என்பதோ எவ ருக்குமே தெரிந்திருக்கவில்லை.

விக்கிலீஸ் தளத்திற்கு இரையாளர்களைத் தேடியே தான் அமெரிக்காவிற்கு வந்துள்ள தாக அசாஞ்சே எல்லோருக்கும் கூறிக் கொண்டிருந்தார். ஆனால், அமெரிக்க அரசு அதை நம்பத் தயாராகவில்லை. சி.ஐ.ஏ இறுக்கமான கண்காணிப்பு யூலியனைச் சூழ்ந்து கொண்டது. அந்தக் கண்காணிப்பையெல்லாம் ஒரு பொருட்டாகவே யூலியன் மதிக்கவில்லை. தன்பாட்டில் தன்வேலையைத் தொடர்ந்து கொண்டேயிருந்தான். கொஞ்ச நாட்களிலேயே தனது வெடியைப் பற்றவைத்தான் யூலியன்.

இம்முறை யூலியனிடம் மாட்டிக் கொண்டது ஒரு தேவாலயக் குழுமம். மதப்பிரசார நடவடிக்கைகள் என்ற பெயரில் அமெரிக்காவின் கலிபோர்னியா இயங்கிய ஒரு தேவா லயக் குழுமத்தில் மறைக்கப்பட்ட பக்கங்களை மக்களின் பார்வைக்காகவிக்கிலீஸ்ஸில்யூலியன்விருந்து வைத்தான்.

அப்படியென்னவாம் அந்தத் தேவாலயக் குழுமம் செய்து வந்தது? பொதுவாகவே அமெரிக்காவில் கிறிஸ்தவமதத்தை பல்வேறு பிரிவுகளும் தமக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை எவரும்சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதில்லை. (சில வேளைகளில் அப்படி பார்ப்பது தெய்வக்குற்றமாகிவிடும் என்ற நம்பிக்கை போலும். இதனைத் தமக்கு வசதியாக்கிக் கொண்டது ஒரு தேவாலயக் குழுமம். நடமாடும் மதப்பிரசாரம் என்ற போர் வையில் மாணவர்களும் மற்றும் தமது வழமை யான வாடிக்கையாளர்களுக்கும் போதைப் பொருட்களை அந்தக்குழுமம் தங்கு தடையின்றி விநியோகித்து வந்தது. தமது போதைப் பொருள் வியாபாரத்துக்கு நாள் தோறும் வாடிக்கையாளர்களை அதிகரிக்கும் செயற்பாட்டிற்காக இளைய மதகுருக்களை தளத்தில் இறக்கினார்கள். யாழ்ப்பாணத்தில் இப்போது வீதியெங்கும் கூவிக்கூவி விற்கப்படும் போதைப் பாக்கு விற்பனையாளர்கள் போலவே அந்த இளம் மதகுருக்கள் போதைப் பொருட்களை மாணவர்களிடத்தே விற்கத் தொடங்கினர். இதனால் பெட்டிக்கடை போல் ஆரம்பித்த தேவாலயக் குழுமம் கொஞ்ச நாட்களிலேயே சுப்பர் மார்கட்போல் சடுதியாக விரிவடைந்தது. விற்பனையும் உயர்ந்தது. வெளிநாடுகளில் உள்ள பாதாளக் குழுக்கள் குறித்த தேவாலயக் குழுமத்திற்கு போதைப் பொருள்களை கிலோ கணக்கில் அனுப்பி வைக்குமளவிற்கு அதன் வியாபார நடவடிக்கைகள் சர்வதேச மயப்படுத்தப்பட்டன. எல்லாவற்றை யுமே சரிவரச் செய்து வந்த தேவாலயக்குழுமம் ஒரே ஒரு பிழையை விடத் தவறவில்லை. தான் செய்யும் சகல நடவடிக்கைகளையும் ஒரு வரி கூடத் தவறவிடாமல் கணினியில் பதிவேற்றிக் கொண்டது தான் அந்தத் தவறு. தேவாலயக் குழுமத்தின் கணினியில் உள்ள பாதுகாப்புக் குறை பாடுகளை இனம் கண்டு அதன் வழியாக ஒரு நாள் யூலியன் ஊடுருவினான். அத்தோடு மட்டும் நில்லாமல் சகல ஆதாரங்களையும் பிரதி செய்து கொண்டு கணினி வலையமைப்பில் இருந்து வெளியேறி விட்டான். அதன் பின்னரே தேவாலயக்குழுமத்தின் போதைப் பொருள் விநியோகம் தொடர்பான மிகமுக்கியமான செயற்பாடுகளை விக்கிலீஸ்ஊடாக கசிய விட்டான். தம் மீதான குற்றங்கள் முன்வைக்கப்படும் "அதை நாம் செய்யவில்லை" என்று எடுத்த எடுப்பிலேயே மறுப்பறிக்கை விடுவது நித்தியாணந்தா சுவாமிகள் முதல் எல்லா மத வாதிகள் வரையும் நீள்கின்ற ஒன்று தான். இதற்கு அமெரிக்காவில் கலிபோர்னியாவில் உள்ள தேவாலயக்குழுமமும் விதிவிலக்கல்ல. விக்கிலீஸ் தன்னுடைய அந்தரங்க அசிங்கங்களை அரங்கேற்றி விட்டதை அறிந்த தேவாலயக்குழுமம் "குய்யோ! முறையோ!" என்று கூச்சலிட்டது. யூலியன் மீதுமான நஷ்ட வழக்கு தொடரப்போவதாக ஊடகங்களில் அறிக்கை மேல் அறிக்கையாக விட்டுக் கொண்டிருந்தது. ஊடக சுதந்திரம் என்ற பெயரில் மக்களின் மத நம்பிக்கையை சிதறடிக்கும் வகையில் தவறான தகவல்களை வழங்குவதாகவும் அந்த அமைப்பு யூலியனைச் சாடியது.

'போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும் நம் வழி நேர் வழியாகட்டும்' என்கிற பாணியில் யூலியன் இந்தச் குற்றச் சாட்டுக்களைக் குறித்தும் மௌனமாகவே இருந்தான். ஆனாலும் அந்த மௌனத்தின் பின்னால் இருந்த ஆபத்து அடுத்த சில நாட்களில் தெரியவந்தது.

போதைப் பொருள் விநியோகம் தவிர்ந்த வேறென்னென்ன சட்ட விரோத நடவடிக்கைகளில் தேவாலயக்குழுமம் ஈடுபடுகிறது என்பது பின்னர் வந்த நாட்களில் விக்கிலீஸ் அம்பலப்படுத்தியது. அத்தோடு தேவாலயக்குழுமத்தின் வாய் அடைபட்டுப் போனது. **(திரைகள் இன்னும் திறக்கும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும்
# செல்வந்தர்தான்..!



விவரங்களைத் தெரிந்து கொள் வது மட்டும் போதாது. உங்கள் சிந்தனா சக்தியை விவரங்களுடன் பொருத்திப் பார்க்க வேண்டும்.

நல்ல நவீனமான கலைக்களஞ்சியங்களில் நீங்கள் கற்றுக் கொள்ளக் கூடியதைக் காட்டிலும் பல மடங்கு அதிகமான விவரங்கள் இடம் பெற்றுள்ளன.

சில ஆயிரம் ரூபாய்கள் செலவழித்தால் அத்தகைய கலைக்களஞ்சியம் ஒன்றை உங்கள் அதிபர் வாங்கி விடலாம். அவருக்கு எப்போது எந்த விவரம் தேவைப்பட்டாலும் அந்த விபரம் எந்த நேரத்திலும் கிடைக்கும். அந்த கலைக் களஞ்சியம் கோப்பி குடிப்பதற்கு, சாப்பாட்டுக்குப் போகாது. அதற்கு விடுமுறை தேவை இல்லை. ஒரு கலைக் களஞ்சியம் வாங்க செலவெல்லாம் சில ஆயிரம் ரூபாய்களே!

எல்லா விவரங்களும் கிடைக்கும் சில ஆயிரம் ரூபாய்களில் .... ஆக நீங்கள் படித்து விவரங்களையெல்லாம் கற்றறிந்தவர் என்றாலும், எல்லா விவரங்களும் உங்களுக்குத் தெரியும் என்றாலும் - உங்களால் நிறுவனத்துக்கு ஏற்படும் பயன் என்ன? வாழ்நாள் சேவையின் மதிப்புகள் சில ஆயிரம் ரூபாய்கள் தான்.

பெரும்பாலானவர்களுக்கு 5 ரூபாய் விலையுள்ள பஞ்சாங்கத்தில் இருக்கிற எல்லா விவரங்கள் கூட தெரிந்திருக்காது. அந்த அடிப்படையில் (விவரங்களை அறிந்த) அந்த அலுவலருடைய வாழ் நாள் வருவாய் 5 ரூபாய் தான் என்றிருக்க வேண்டும். உண்மையில் அந்த விவரங்களை 5 ரூபாய் கொடுத்து ஒரு பஞ்சாங்கத்தை வாங்கி வைத்துக் கொண்டால் போதும். அந்த பஞ்சாங்கம் மேலும் திறமையுடன் மேலும் சௌகரியமாக தொழில் அதிபருக்குச் சேவை செய்யும்.

நீங்கள் விவரங்களை அறிந்தவர் என்றால் உங்கள் மதிப்பு - கலைக்களஞ்சியத்தின் அளவு விவரம் தெரிந்திருந்தால் சில ஆயிரம் ரூபாய் கள். பஞ்சாங்கம் அளவு விவரம் தெரிந் திருந்தால் 5 ரூபாய். அவ்வளவுதான்.

சிந்தனைகளால் செயல்படுத்தப்பட்டால் தான் விவரங்களுக்கு மதிப்பு ஏற்படும்.

நீங்கள் விரைவாக செல்வந்தராவது என்றால் - உங்களுக்கு மதிப்பு ஏற்படும் என்றால் -

1. உங்களுக்கு பயனுள்ள விவரங்களை தெரிந்திருக்க வேண்டும்.

2. பயனுள்ள அந்த விவரங்களை பிரத்தியட்சமான யோசனைகளால் செயல்படுத்த வேண்டும்.

3. அவற்றின் மூலம் மேம்பாடுகளை ஏற் படுத்தி லாபகரமான முன்னேற் றத்தை ஏற்படுத்த வேண்டும்.

விவரம் என்பது இயங்காதது. இயங்க முடியாதது. அது காகிதத்தில் உள்ள ஒரு தகவல். விவரம் என்பது செயல்படாதது ஒரு விவரத்தை பயன்படுத்தவில்லை என்றால் அது எதையும் உற்பத்தி செய்யாது. ஆகவே விவரம் மட்டுமே லாபத்தைத் தருவதில்லை.

ஆனால் பயன்படுத்தாத விவரம் என்பது பயன்படுத்தாத மின் சக்திப் பெட்டகம். அந்தப் பெட்டகத்தை நாம் பயன்படுத்தினால்தான் அதிலிருந்து மின் சக்தி நமக்குக் கிடைக்கும். ஆக சக்திப் பெட்டகத்தைக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு ஒவ்வொரு விவரத்திலும் இருக்கிறது.

மேம்பாட்டுக்கும் லாபகரமான முன்னேற்றத்துக்கும் ஆன உங்களுடைய யோசனைகளை, மாபெரும் உயரத்திற்குக் கொண்டு செல்ல - உங்களிடம் உள்ள விவரங்கள் எனும் மின் சக்திப் பெட்டகத்தை உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். எந்த அளவுக்கு அவற்றை நீங்கள் உபயோ கப் படுத்திக் கொள்கிறீர்களோ, அதே அளவுக்கு நீங்கள் சீக்கிரம் செல்வந்தராகி விடலாம்.

பெரும் செல்வத்துக்கான பொற்பாதை எது என்றால் - பயனுள்ள விவரங்களைத் தெரிந்து கொள்வதுதான். பயனுள்ள விவரங்களை - (ஒருங்கிணைத்து) செயலில் கொண்டு வாருங்கள். மதிப்புமிக்க மேம்பாட்டுக்கு - லாபகரமான முன்னேற்றத்துக்குப் பயனுள்ள விவ ரங்களைப் பயன்படுத்திக் கொள் ளுங்கள் - அதன் மூலம் நீங்கள் மேலும் பயன்மிக்கவராகலாம். உங் கள் மதிப்பு மேலும் உய ரும். பிறகு நீங்கள் சீக்கிரம் செல் வந்தராகலாம்.

ஆக, செல்வம் சேமிப்பது என் பது இனியும் சிக்கல் நிறைந்ததோ கடினமானதோ அல்ல.

நீங்கள் செல்வம் சேர்க்கலாம். யாரும் செல்வம் சேர்க்கலாம்.

நமது பள்ளிக் கூடங்களில் அதைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். ஆனால் பள்ளிக் கூடங்களில் மாணவர்கள் உள்ளங்களில் வெறும் விவரங்கள் மட்டுமே திணிக்கப்படுகிறது. அது பற்றி உலகப் புகழ்பெற்ற நாவலாசிரியர் ஆன டோல் பிரான்ஸ் - நமது கல்வியாளர்களைப் பற்றி

- ''நமது கல்வி முறை இதுவரை வெறும் விவரங்களைத் திணிப்பதாக மட்டுமே இருக்கிறது. இனி இது கருத்துகளைப் போதிப்பதாக இருக்க வேண்டும்'' என்று கூறியுள்ளார்.

ஒவ்வொரு மாணவனுக்கும் மூன்று விஷயங்கள் கற்றுக் கொடுக்கப்பட வேண் டும்.

1. பயனுள்ள விவரங்கள் - குறிப்பிட்ட ஒரு பொறுப்பு அல்லது வேலைக்குப் பொருந்தக் கூடிய விவரங்கள்.

2. பயனுள்ள யோசனைகளை உரு அதாவது பயனுள்ள தகவல்கள் மற்றும் விவரங்களை லாபகரமான முன்னேற்றத்துக்கு - மேம்பாட்டுக்கு உதவும் வகையில் மாற்றுவது; இந்த அம்சங்கள் இணைந்த யோசனைகள் - அவற்றை உருவாக்கும் முறைகள்.

3. மதிப்புமிக்க லாபகரமான மேம்பாடுகள் மற்றும் முன்னேற்றங்ளை அவற்றின் ஆராய்ச்சி முடிவுகளைப் பிறருக்குத் தெரியப்படுத்தும் முறைகள்.

இந்த மூன்று அம்சங்கள் அடங்கிய கல்வியானது மாணவர்களுக்குக் கற்றுத் தரப்பட வேண்டியது மட்டும் அல்ல. தன்னை உயர்த்திக் கொள்ள விரும்புகிற எல்லாருக்குமே - அதிலும் சுயமாக வீட்டில் இருந்து கொண்டு படிக்கும் எல்லாருக்குமே பொருத்தமானது.

வெற்றிக்கான நிரூபிக்கப்பட்ட வழிமுறைகளை நீங்கள் கற்றுக் கொண்டு அவற்றைப் பயன்படுத்தாவிட்டால் நீங்கள் வெற்றி பெற முடியாது.

மேம்பாட்டுக்கான மதிப்புமிக்க யோசனைகளை எப்படி வெளிப்படுத்துவது? லாபகரமான முன்னேற்றத்துக்கு அவற்றை எப்படிக் கடைப்பிடிப்பது?

இந்த அம்சம் நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய மூன்றாவது அம்சம். இது பற்றி அடுத்தவாரம் பார்ப்போம்.

(தொடரும்.....)


சுடர் ஒளி வாசகர்களே!



குடத்தில் இட்ட விளக்காக உங்களுக்குள் மறைந்து கிடக்கும் படைப்புத் திறன்களைக் குன்றின் மேல் தீபமாக்கிட சுடர் ஒளி காத்திருக்கிறது.

சிறுகதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள், எதுவானாலும் அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும்.

படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி,
இல.361
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் உலகம்

இலக்கம் 01 இல் இருந்து 30 வரையிலான இலக்கங்களைத் தொடர்பு படுத்தி உருவத்தைக் கண்டு பிடியுங்கள்.






# மாயத் தீவில் மந்திரக் கிழவி

சிறுவர் மர்மத் தொடர் 15

இளம்பச்சைநிற வாயு முகத்தில் பட்டதுமே இளவரசர்கள் இருவருக்கும் தலைசுற்றத் தொடங்கியது. அந்தரத்தில் இருப்பவர்கள் போல இருவரும் அங்குமிங்கும் அலைந்தனர். பின்னர் வெறித்த பார்வையோடு மந்திரக் கிழவியை மண்டியிட்டு வணங்கினர்.

தன் மந்திரப் புகையால் பீடிக்கப்பட்டு, மகுடிக்கு மயங்கும் நாகங்கள் போல தன்னை வணங்கி நிற்கும் இளவரசர்களை ஏளனத்தோடு பார்த்தாள் மந்திரக்கிழவி.

"அட சிறுவர்களே! என் மந்திர வலிமையின், முன்னால் நீங்கள் இருவரும் கால் தூசிக்குச் சமன். வரும் பௌர்ணமி தினத்தன்று உங்கள் இருவரையும் காளி தேவிக்கு நரபலி கொடுத்து சிரஞ்சீவியாகி விட்டால் என்னை எவருமே வெல்ல முடியாது. எனக்கு என்றுமே அழிவில்லை" என்று ஆவேசம் வந்தவளைப் போல கத்தினாள் கிழவி.

அவள் கத்தியது எதுவுமே இளவரசர்களின் காதுகளில் விழுந்ததற் கான எந்த அறிகுறியும் தென்படவில்லை. தொடர்ந்தும் அவளை வணங்கியபடியே இருந்தனர்.

"வணங்கியது போதும் என்னோடு மந்திரத்தீவுக்குப் புறப்படுங்கள்" என்று கூறிவிட்டு, தன் கையை வானை நோக்கி அசைத்தாள் மந்திரக்கிழவி. மறுநொடியே இருபுறமும் இறக்கைகள் கொண்ட தேரென்று அங்கு வந்து இறங்கியது. இளவரசர்களும் மந்திரக் கிழவியும் தேரில் ஏறிய மறுநொடியே 'ஜில்' லென்று வானில் பறந்தது மாயத் தேர்.

மந்திரத் தீவில் இளவரசர்களுக்கு இன்னும் பல விபரீதங்கள் காத்திருந்தன.

**(மந்திரக் கிழவி வருவாள்...)**

## பள்ளி செல்ல விரும்பு!

பள்ளி செல்ல விரும்பு
பாடம் வெல்லக் கரும்பு;
படித்து விட்டுத் திரும்பு
பண்ண வேண்டாம் குறும்பு



# உதவிக்கு உதவி

அருணன்



கழுதை ஒன்று, நிறையப் பொதிகளைச் சுமந்து கொண்டுசென்றது. அதன் பின்னால் கழுதையின் எஜமானர் தான் வளர்க்கும் நாயும் வந்து கொண்டிருந்தார். செல்லும் வழியில் புல் தரையைப் பார்த்ததும், கழுதையை அங்கு மேயவிட்டு மரத்தின் நிழலில் படுத்துத்தூங்கினார் எஜமானர்.

கழுதை அங்கிருந்த புற்களை நன்கு மேய்ந்தது. ஆனால், நாய்க்குத் தின்பதற்கு எதுவுமில்லை. பசி, அதன் வயிற்றைப் பிடுங்கியது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தநாய், கடைசியாக கழுதையைப் பார்த்து, "நண்பனே, என்னால் பசிதாங்க முடியவில்லை. எஜமானரோ தூங்குகிறார். கொஞ்சம் கீழே படு.உன் பொதியில் உள்ள உணவில் கொஞ்சம் எடுத்துக் கொள்கிறேன்" என்று கெஞ்சியது. நாயின் கெஞ்சலை கழுதை பொருட்படுத்தவில்லை. அது ஆனந்தமாகப் புற்களை மேய்ந்துகொண்டிருந்தது. நாயும் விடாமல் கெஞ்சிக் கொண்டிருந்தது. நாயின் தொந்தரவு தாங்காத கழுதை, "என்னப்பா அவசரம்? எஜமானர் எழுந்திருக்கட்டும். அவர் சாப்பிடும்போது உனக்கும் தான் கொடுப்பாரே" என்றது. வேறுவழியில்லாமல் நாய் சோர்ந்து போய்படுத்துக்கொண்டது.

அப்போது ஓநாய் ஒன்று மேய்ந்து கொண்டிருந்த கழுதை மீது பாய்ந்தது. பயத்தால் அலறிய கழுதை, "நண்பா, சீக்கிரம் ஓடிவந்து என்னைக் காப்பாற்று" என நாயைப் பார்த்து கதறியது. படுத்திருந்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல், "ஏன் அவசரப்படுகிறாய்? கொஞ்சம் பொறுமையாக இரு, எஜமானர் விழிக்கட்டும். அவர் தான் கட்டாயம் உனக்கு உதவி செய்வாரே" என்றது நாய். கழுதை, நாய்க்கு உதவி செய்யாமல் தான் செய்த தவறை நினைத்துவருந்தியது.

நீதி: நாம்மற்றவர்களுக்கு உதவினால்தான், மற்றவர்கள் நமக்கு உதவிசெய்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலை போனவர்களின் சிலை திறப்புகள்

அக்கினிகுமாரன்



அண்மையில் கொழும்பு வாட்ஸ் பிளேசில் உள்ள லக்ஷமன் கதிர்காமர் கற்கை மையத்தின் வளாகத்தில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மறைந்த லக்ஷமன் கதிர்காமர் அவர்களின் உருவச்சிலை திறந்து வைக்கப்பட்டது.

சுவாமி விபுலாநந்தர், புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை போன்ற தமிழிற்கு அளப்பரிய தொண்டாற்றியவர்களின் சிலைகள் மீண்டும் மீண்டும் உடைக்கப்படும் நாட்கள் இவை. தமிழர்களின் பெருமதிப்புக்குரிய தந்தை செல்வாவின் சிலையின் தலையும் சிதைக்கப்பட்டதும் எமது நாட்டில் தான். தமிழ்மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டு விவேகானந்தர், மகாத்மாகாந்தி ஆகியோரின் சிலைகள் அகற்றப்பட்டதும் எமது மண்ணில் தான் இடம்பெற்றன.

தமிழ்பெரியார்களினதும், தமிழர்களால் மதிக்கப்படுபவர்களினதும் சிலைகள் உடைக்கப்படுவதும் நினைவுத்தூபிகள் சேதமாக்கப்படுவதும் ஒரு அரசியல் நாகரீகமாகவே மாறிவிட்டது.

அதே போன்று கிறீஸ்தவ, முஸ்லிம் வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்படுவதும் சேதமாக்கப்படுவதும் அங்கீகரிக்கப்பட்ட காடைத்தனங்களாகி விட்டன. இப்படியான ஒரு சூழ்நிலையில் ஒரு தமிழருக்கு நாட்டின் தலைநகரின் மையப்பகுதியில் சிலை திறக்கப்பட்டுள்ளது. அதுவும் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களால். அவர் கதிர்காமரின் பாதத்தில் மலர் வைத்து அஞ்சலியும் செலுத்தியுள்ளார்.

பலர் ஆச்சரியப்படக்கூடும். தமிழர் சிலைகளும் பௌத்தர் இல்லாதவர்களின் வழிபாட்டு மையங்களும் உடைக்கப்படும். நாட் களில் தமிழர் ஒருவருக்குத் தலைநகரில் சிலையா எனக் கேள்வியையும் எழுப்பலாம். அடிப்படையைத் தேடிப்போனால் இங்கே ஆச்சரியப்பட எதுவுமே இருக்காது. முன்னாள் அமைச்சர் லக்ஷமன் கதிர்காமரோ அவரின் பரம்பரையோ தமிழராகப் பிறந்தது உண்மை. ஆனால் என்றுமே அவர்கள் தமிழராக வாழ்ந்ததில்லை.

**தம்மிடம் விலை போனவர்களுக்குச் சிலையமைத்து ஒரு வித நாடகத்தை அரங்கேற்ற ஏற்கனவே அதிகார பீடங்களுக்கு விலை போய்விட்டவர்கள்**

சுதந்திர இலங்கையின் முதற் கடற்படைத்தளபதி அன்ரன் கதிர்காமர். அவர் கடற்படைத் தளபதி மட்டுமன்றி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடும்ப நண்பன். 1958 ஆண்டு இனக்கலவரத்தை அடுத்து இலங்கையின் இராணுவத்தளபதி அன்ரன் முத்துக்குமார் ஒரு தமிழர் என்பதால் பதவி நீக்கப்பட்டு பாகிஸ்தான் தூதுவராக அனுப்பப்பட்டார். ஆனால் தமிழரான அன்ரன் காதிர் காமர் தனது ஓய்வுகாலம் வரை கடற்படைத் தள பதியாகவே நிலைத்திருந்தார்.

அவர் அவ்வளவு தூரம் பண்டாரநாயக்கா குடும்பத்தின் விசுவாசி. கண்டியில் பிறந்து திரித்துவக் கல்லூரியில் கல்வி பயின்ற அன்ரன் கதிர்காமரின் இரத்த வாரிசான லக்ஷமன் விசுவாசத்தில் சளைத்துவிடமுடியுமா? மக்களால் தெரிவு செய்யப்படாமலே அவர் நாடாளுமன்ற உறுப்பினராக்கப்பட்டு திருமதி சந்திரிக்காவால் வெளிவிவகார அமைச்சராக்கப்பட்டார். வேறு எந்த ஒரு சிங்கள வெளிவிவகார அமைச்சர்களை விடவும் தமிழர்களுக்கு எதிரான பல சாதனைகளை நிலைநாட்டியவர் அவர்.

தனது தமிழன் என்ற அடையாளம் தனது ஆற்றல் அத்தனையையும் முழு வீச்சில் தமிழர்களுக்கு எதிராகப் பிரயோகித்தார். அமெரிக்காவில் இடம்பெற்ற செப்ரெம்பர் 11 இரட்டைக்கோபுர தாக்குதலை அடுத்து அமெரிக்கா தீவிர வாதத்திற்கு எதிராக ஒரு கடும் நிலைப்பாட்டை எடுத்தது. அச்சந்தர்ப்பத்தைப் பாவித்து விடுதலைப்புலிகளை அமெரிக்காவின் பயங்கரவாதப்பட்டியலில் இணைக்கக் கடும் முயற்சிகளை மேற்கொண்டார். மீண்டும் மீண்டும் அமெரிக்காவுக்கு விஜயங்களை நடத்திப் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தினார்.

இறுதியில் அதில் வெற்றியும் பெற்றார். அவர் அத்துடன் நின்று விடவில்லை. அவர் பல நாடுகளுக்கும் சென்று இராஜதந்திரப் பேச்சுகளை முன்வைத்து மொத்தமாக 34 நாடுகள் விடுதலைப்புலிகளை தடைசெய்ய வழி வகுத்தார். அதுவே பயங்கர வாதத்திற்கு எதிரான போர் என்ற போர்வையில் இலங்கை அரசு ஒரு இன அழிப்புப் போரை முன்னெடுக்கக் களமமைத்துக் கொடுத்தது என்பதை எவரும் மறுத்து விட முடியாது.

எனவே இலங்கை அரசு லக்ஷமன் கதிர்காமருக்கும் சிலை வைப்பதிலும், மஹிந்த ராஜபக்ஷ அதைத்திறந்து வைப்பதிலும், வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரீஸ் உட்படப் பல அமைச்சர்கள் மலரஞ்சலி செய்து அவரை வானளாவப் புகழ்வதிலும் என்ன ஆச்சரியம் இருக்க முடியும். இது அவர்கள் செலுத்தும் நன்றிக்கடன். அதே வேளையில் அவர்கள் தங்கள் நன்றிக் கடனை இன்னுமொரு விதமாகவும் வெளிப்படுத்த தவறவில்லை. அதாவது கீரிமலையிலுள்ள லக்ஷமன் கதிர்காமரின் பரம்பரைப் சொத்தான காணி அரசால் சுவீகரிக்கப்படுவதற்கெதிராக நீதிமன்றில் வழக்குத் தொடுத்துள்ளார்.

இதன் மூலம் அரசு தம்மையும் தம் இனத்தையும் விற்றுப் பிழைப்பவர்களுக்கு ஒரு அற்புதமான செய்தியை சொல்லியுள்ளது. அதாவது உங்கள் அடிமைத்தனத்துக்கும் இனத்துரோகத்துக்கும் நாங்கள் உங்களுக்குச் சிலை வைக்கத் தயார். ஆனால் நீங்கள் என்றுமே இந்த நாட்டின் உரிமையற்றவர்கள். தேவை ஏற்படும் போது உங்கள் பரம்பரைச் சொத்தைக் கூட நம் அபகரிப்போம் என்பது தான் அது.

1915ல் சிங்கள முஸ்லிம் கலவரம் ஏற்பட்ட போது பல சிங்களத் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். சேர்.பொன். இராம நாதன் லண்டன் சென்று பிரிட்டிஷ் மகாராணியுடன் வாதாடி அவர் களை விடுவித்தார். அதற்காக சிங்களத் தலைவர்கள் தேரில் வைத்து இழுத்தனர். பழைய நாடாளுமன்ற வளாகத்தில் அவருக்குச் சிலை யும் வைக்கப்பட்டது. இப்போது நகர அபிவிருத்திக்காக அதை அகற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதுவும் ஒரு வித நன்றிக்கடன்தான்.

இப்படியாக விலை போனவர்களின் சிலை திறப்புப்பட்டியலில் கடைசியாக கதிர்காமரின் பெயரும் பொறிக்கப்பட்டு விட்டது. இப்படியாக அதிகாரபீடங்கள் தம்மிடம் விலை போனவர்களுக்குச் சிலையமைத்து ஒரு வித நாடகத்தை அரங்கேற்ற ஏற்கனவே அதிகார பீடங்களுக்கு விலை போய்விட்டவர்கள் விலை போக மறுத்தவர்களுக்கு சிலை வைத்து அதில் தங்கள் பெயர்களைப் பொறித்து தமது களங்கத்தை மறைக்க முயல்வதுண்டு. அண்மையில் இலத்திரனியல் ஊடகமொன்றுக்கு பேட்டியளித்த மாநகரசபை உறுப்பினரும் மாகாண சபை வேட்பாளருமாகிய ஒருவர் முத்திரைச் சந்தியிலுள்ள சங்கிலியன் சிலை திறக்கப்பட்டமை தொடர்பாக எழுந்த விமர்சனங்கள் தொடர்பாக தனது கடும் கண்டணங்களை வெளியிட்டார்.

சங்கிலியன் யாழ்ப்பாணத்தின் வீர வரலாறு படைத்த அரசன் என வும் அவருக்கு சிலை திறக்கப்பட்டதை தமிழ்த்தேசியக் கூட்டமைப் பும் சில ஊடகங்களும் எதிர்த்தன என கருத்துவெளியிட்டிருந்தார். சங்கிலி யனுக்கு மட்டுமல்ல ஆறுமுகநாவலர், ஔவையார், திருவள்ளுவர் எனப் பல சிலைகளை நிறுவியவர் மறைந்த முன்னாள் யாழ் மாநகரமேயர் துரையப்பா அவர்கள். அப்போது அவர் அரசாங்கத்துடன் இணைந்திருந்தபோதும் சிலை திறப்பை எவரும் எதிர்க்கவில்லை.

ஆனால் வாளை ஓங்கிய நிலையில் அல்பிரட் துரையப்பாவால் நிறுவப்பட்ட சங்கிலியன் சிலையை அகற்றி விட்டு வாளைத் தாழ்த்திய நிலையில் சரணடைவது போன்ற தோற்றத்தில் சிலை அமைக்கப்படுவதையே தமிழ்தேசியக் கூட்டமைப்பும் ஊடகங்களும் மட்டுமன்றி மக்களும் எதிர்த்தனர். அத்தகைய விடாப்பிடியான எதிர்ப்பின் காரணமாகவே தாழ்ந்த வாள் ஓரளவுக்காவது உயர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



சரணடைவது அரசியலைக் கொள்கையாகக் கொண்ட மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜவோ, அதைத்திறந்து வைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களோ சங்கிலியன் வாள் தாழ்ந்து போவதை விரும்பலாம். ஆனால் தமிழ்மக்கள் அதை ஏற்கப் போவதில்லை. ஆனால் பரநிருப சிங்கனின் சிலையை வர்கள் திறந்து வைத்தால் நிச்சயமாக அது மிகவும் பொருத்தமாகவே அமையும்.

எப்படியிருப்பினும் விலைபோனவர்களுக்கும் சிலைகள் திறக்கப்படுகின்றன. விலை போனவர்களும் சிலைகளைத் திறக்கின்றனர். உரிமைகள் பற்றி வாயே திறவாத அடிமைகளாக இருக்கும் வரை சிலைகள் எழும்.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளுக்கு ஏன் இரண்டு மனைவியர்?



## பித்தன் பதில்கள்

**எழில்வேந்தன்,**
**வெள்ளவத்தை, கொழும்பு - 06.**

**கே:** பித்தரே! வடமாகாணத்தில் கூட்டமைப்பை விடவும் தனக்குத்தான் ஆதரவு அதிகம் என்று முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா அண்மையில் சொல்லியிருக்கிறாரே. இது பற்றி....?

**ப:** பாவம் அவர். கனகாலம் ஜெயிலுக்குள்ள இருந்ததால மூளை கலங்கிப்போச்சுப்போல. அதுதான் தன்ர விடுதலைக்காண்டி பாடுபட்ட டிரான் அலஸ், அர்ஜுன ரணதுங்க எல்லாரையும் கட்சியில இருந்தே கலைச்சவர். பிறகு ஷிராணியை வளைச்சுப்பிடிச்சு தன்ரை கட்சிக்கு காத்து ஏத்த வெளிக்கிட்டு அதிலையும் தோல்வி. இப்ப ஒரு எலெக்சன் நடந்தால் அவருக்கு வடக்கு மாகாணத்தில பத்துப் பதினைந்து வாக்குகள் விழுகிறது அதிசயம். இதெல்லாம் எங்களுக்குத் தெரியும். பாவம் அந்த மனுசன் இன்னமும் ஜனாதிபதித் தேர்தல் காலத்தைவிட்டு வர மாட்டன் எண்டு நிக்குது. அப்ப கூட கூட்டமைப்பு கேட்டதாலதான் தமிழ்ச் சனங்கள் தங்கடை உறவுகளைக் கொலைசெய்த ஆமியின்ரை தளபதி எண்டதையும் மறந்து அவருக்கு வோட் பண்ணினதுகள். ஜெயிலால வந்தபிறகு தனக்கு ஆதரவாயிருந்த எல்லாரையும் எட்டி உதைச்ச மாதிரி இப்ப கூட்டமைப்பையும் உதைச்சிருக்கிறார். அவ்வளவுதான். இவர் மாதிரி காமெடி பீஸ்களின்ரை கதையை ஆர்தான் இப்ப கணக்கில எடுக்கினம்.



**த.பிரகாஷ், முல்லைத்தீவு.**

**கே:** பித்தா! ஆஷஸ் கிண்ணப்போட்டிகளில் வெல்ல வேண்டிய ஆட்டங்களில் எல்லாம் ஆஸ்திரேலிய அணி வீணாகத் தோற்றுள்ளதே. இது ஆஸ்திரேலியாவின் பலவீனமா அல்லது இங்கிலாந்தின் பலமா?

**ப:** இப்ப கொஞ்ச நாளா அந்த ரீமுக்குள்ள ஒரே குத்துவெட்டு. முந்தி ரிக்கி பொண்டிங் இருக்கேக்க எல்லாரும் வலு ஒற்றுமையாய் இருந்தவங்கள். ஒவ்வொருத்தற்ற குணமும் பொண் டிங்குக்கு அத்துப்படி. அவைக்கேத்த மாதிரி பொண்டிங்கும் நடந்ததால ரீமில பெரிசாப் பிரச்சினை இருக்கேல்ல. அதால விளையாட்டிலை மட்டும் கவனம் செலுத்தி எல்லா ரீமையும் ஆஸ்திரேலியா புரட்டி எடுத்தது. ஆனா மைக்கல் கிளாக்குக்கு அப்பிடிப் பக்குவம் இல்லை. அதால ஊரிப்பட்ட சண்டை. ரீமுக்குள்ளேயே பிச்சல் பிடுங்கல் எண்டா எப்பிடி எதிர் ரீமோட பைற்பண்ண முடியும்? அதுதான் இரண்டாவது, மூண்டாவது போட்டியளில வெற்றிக்குக் கிட்டவாய் வந்தும் ஆஸ்திரேலியாவாவை வெல்ல முடியேல்ல. அதோட இங்கிலாந்து ரீமும் லேசுப்பட்டதில்லை. தங்கடை சொந்த மண்ணில நடக்கிறதால இங்கிலாந்துக்கு சப்போட்டும் கூட. அதால உயிரைக்குடுத்து விளையாடி வெல்லப்பாக்கிறாங்கள். இந்த ஒற்றுமை, சொந்த மண் எல்லாம் விளையாட்டுக்கு மட்டுமல்ல. எல்லாத்துக்கும் பொருந்தும்.



**ந.சாளனி, பளை.**

**கே:** பித்தா! இந்துக் கடவுளர்கள் அனேகருக்கு இரண்டு மனைவிகள். இப்படியான மரபு ஏன் உருவானது?

**ப:** முந்தின காலத்தில இப்பிடி ஒருத்தனுக்கு ஒருத்தி எண்ட பழக்கமெல்லாம் இருக்கேல்ல. அதோட ஒண்டுக்கு இரண்டு மூண்டு கலியாணம் கட்டினாத்தான் ஆம்பிளைக்கு மதிப்பு எண்ட நிலையும் அப்ப இருந்திச்சு. மனுசருக்கே இப்பிடி எண்டா எப்பிடிப் கடவுளை ஒரு மனைவியோட இருக்க விடுகிறது?. அவருக்கு கௌரவக் குறைச்சலெல்லோ?. அதுதான் எல்லாக் கடவுளுக்கும் இரண்டு மூண்டு துணைகளை உருவாக்கிக் கும்பிட்டினம். (அந்தக் காலத்தில கடவுளா வாறதுக்கு இரண்டு மனைவி இருக்கிறது கட்டாய தகுதியா இருந்தமாதிரி இப்பவும் இருந்தா எவ்வளவு நல்லாயிருக்கும்).

## சொற்சிலம்பம் போட்டி இல: 583

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | | ■ | 5 |
| 6 | | | | ■ | ■ | 7 | |
| 8 | | | | 9 | | ■ | ■ |
| ■ | | ■ | ■ | | ■ | 10 | 11 |
| 12 | ■ | 13 | 14 | | ■ | 15 | |
| 16 | 17 | | | ■ | | 18 | |
| 19 | | ■ | | ■ | | ■ | |
| ■ | 20 | | ■ | ■ | 21 | | |

அனுப்புபவர் பெயர்:........................................................

விலாசம்:........................................................

........................................................

கையொப்பம்:........................................................

**மேலிருந்து கீழ்**
1. செய்யக்கூடாத
2. உலகம்
3. தோட்டத் தொழிலாளர்கள் வாழும் வீட்டு வரிசை
4. பூட்டானின் தலைநகரம்
5. ஆபரணம்
9. தினுசு வகை
10. மேலதிகம்
11. திறப்பு
12. சுணங்கு
13. அம்மாவின் சகோதரன்
14. உறைந்த பால்
17. பாற்பசு
18. முன்னர்

**இடமிருந்து வலம்**
1. தபாற்கந்தோர்த் தலைவர்
6. செயல்
7. விரோதம்
8. நிலை கெடுதல்
10. தோன்று (சூரியன்)
13. 30 நாள்கள் கொண்டது
15. சிறகடித்துச் செல்
16. கிராம தேவதை
18. வருத்தம்
19. திறக்குமாறு ஏவல்
20. வாய் உள் உறுப்பு (குழம்பியுள்ளது)
21. சேதம் உண்டு பண்ணும் காற்று.

### சொற்சிலம்பம் போட்டி இல. 583

சொற்சிலம்பம் 583 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 04 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 04 மற்றும் 11 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 581 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**
1. சபதம், 2. மகுடி, 3. சிரி, 4. மதிப்பு, 5. தன், 8. யன்னல், 9. துப்பாக்கி, 11. சரம், 13. அங்கு 14. தம் 15. வர

**இடமிருந்து வலம்**
1. சமர், 3. சிரமம், 5. பகு, 6. தரி, 7. தடியன், 9. துப்பு, 10. யாப்பு, 11. சனம், 12. ஏரல், 13. அக்கினி, 15. வாங்கி, 16. வரகு, 17. தின்.

### போட்டி இல. 580 இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | ச.பரமேஸ்வரி, இல. 43/31, திசவீரசிங்கம் சதுக்கம் மேற்கு. மட்டக்களப்பு. |
| 2ஆம் பரிசு | ஐ.தாஜிடீன், பீன்ஸ் வீதி, அட்டாளைச்சேனை. |
| 3ஆம் பரிசு | திருமதி வஸந்தா பாலேந்திரா, இல.21, நெல்சன் பிளேஸ், கொழும்பு - 06 |

### பாராட்டுப் பெறுவோர்

(1) இ.ரேணுகா,
இல. 85/4, கார்மல் வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.

(2) சின்னையா செல்வராஜ்,
இல. 9/5, B - 10 மஜித் பிளேஸ்,
அவிசாவெலை வீதி, வெல்லம்பிட்டிய.

(3) வி.செல்வநாயகம்,
சிவன்கோயில் வீதி, புத்தூர்.

(4) எம்.எம்.மலர்விழி ஜேசுதாசன்,
'இயேசு இல்லம்' இல.155/ 07,
ஜெம்பட்டா வீதி, கொழும்பு - 13.

(5) செல்வி செ.தர்மினி,
வல்லை வீதி, அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(6) கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம், கந்தசாமி
கோயிலடி,
வட்டுக்கோட்டை.

(7) வே.இராசநாயகம்,
சோரன்பற்று, பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையோருக்கான புதிய பகுதி!

# காதலர் மட்டும்...

## காதல் ஜோதிடம்



### உங்கள் பொருத்தம் எப்படி?

காதலர்கள் கட்டாயம் அறிய வேண்டிய சங்கதிகள்...

**காதல் இனிக்குமா?**

ஏழாம் இடம்: இந்த இடம் காதலை, காமத்தை நிர்ணயிக்கும் இடம். இதை களத்திர ஸ்தானம் என்று சொல்வார்கள். இந்த இடம், இந்த இடத்தின் அதிபதி பலம் பெறுவதும், நீச்சம் அடையாமல் இருப்பதும் முக்கியம். இந்த இடத்தை வைத்துதான் ஒருவரது நடத்தை, ஆசை, விருப்பம், காதல் ஈடுபாடு போன்றவற்றை அறிய முடியும். இந்த இடத்தில் பாவ கிரகங்கள், நீச்ச கிரகங்கள் அறவே இருக்க கூடாது. கூடுமானவரை இந்த இடம் எந்த கிரகமும் இல்லாமல் இருப்பது விசேஷம். அப்படி அமைந்தால் காதலும் வாழ்க்கையும் சிறப்பாக அமையும். ஏழாம் வீட்டில் கிரகம் இருந்தால் அதன் தன்மை, வலிமைக்கு ஏற்ற ஜாதகங்களை கொண்டவர்களுக்கே இனிமையான காதல் அமையும். ஏழாம் வீட்டிலோ, ஏழாம் அதிபதியுடனோ பாவ கிரகங்கள், நீச்ச கிரகங்கள், தீய கிரகங்கள், ராகு-கேது போன்ற நிழல் கிரகங்கள் சேர்ந்தாலும், பார்த்தாலும் காதல் தடம் மாறிப்போகும்.

ஒழுக்க குறைபாடு ஏற்படக்கூடிய சூழ்நிலையும் உருவாகும். காதலர்களுக்கு இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு அவரவர் தனித்தனி பாதையில் போகும் நிலையும் ஏற்படலாம். குரு பார்வை இருந்தால் ரகசியமாக, சாமர்த்தியமாக, மாட்டிக்கொள்ளாமல் காதல் செய்வார்கள். சுபக்கிரக பார்வை இல்லாமலோ, நீச்ச கிரக திசை, பாவ கிரக திசை நடந்தாலோ ரகசிய காதலுக்கு வாய்ப்பே இல்லை. இவர்களது காதல் ஊருக்கே தெரிந்துவிடும். நல்ல கிரக அம்சங்கள் இருந்தால் நல்ல காதலர் அமைவார்.

(அடுத்தவாரம் தொடரும்)

## அன்பே உயர்ந்த பரிசு

இந்தியாவில் இருக்கும் போது துளிர்விட்ட எங்கள் காதல் இன்று 6ஆவது வருடத்தை நோக்கி பயணிக்கிறது. இத் தருணத்தில் என் காதலில் ஏற்பட்ட மறக்கமுடியாத நினைவை 'சுடர் ஒளி' யின் **'காதல் பரிசு'** மூலம் பகிர்ந்து கொள்வதில் மகிழ்கிறேன்.

அன்று எல்லாக் காதலர்களும் கொண்டாடும் காதலர் தினம். திடீரென என்னை ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்றார் என் காதலன். அது ஆடைகள், சொக்லேட் வகைகள், பான்சிபொருள்கள் என பல்வேறு பிரிவுகளைக் கொண்ட 7 மாடி கட்டடங்களை உடைய பெரிய கடை. அங்கு என் கையில் பத்தாயிரம் ரூபாவைக் கொடுத்து, **"இது நான் உழைத்த பணம். உனக்குத்தான் உரிமையானது. இங்கு நீ விரும்பியதையெல்லாம் வாங்கு"** என்றுகூறினான். நான் ஒவ்வொரு பொருளையும் வாங்கும் போது எனது சந்தோசத்தைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தான் என் காதலன். எனக்கு அந்தக் கணத்தில் வாங்கிய பொருள்களை விடவும் என் சிரிப்பில் தான் மகிழ்கின்ற கடவுளின் பரிசான என் காதலனே உயர்ந்த பரிசாகத் தெரிந்தான். என் காதனுக்கு அந்த நேரத்தில் என்னால் கொடுக்க முடிந்த பரிசு, என்னவனின் நெற்றியில் என் உதடுகளால் பதிக்கப்பட்ட அன்பான முத்தமும் ஒரு துளி ஆனந்தக் கண்ணீருமே. ஒவ்வொரு காதலர்களுக்கும் உண்மையான பாசத்தை விட நிகரான பரிசு வேறுண்டோ இவ்வுலகினில்...?.

**இ.கஸ்தூரி**, யாழ்ப்பாணம்.

**இந்தவாரம் "காதல் பரிசு; உங்களுக்கும் பரிசு" போட்டியில் பரிசு பெற்ற படைப்பு இங்கு பிரசுரமாகியுள்ளது. இவருக்கான பெறுமதியான பரிசு விரைவில் அவரிடம் சேர்ப்பிக்கப்படும். இதுபோல் நீங்களும் கலந்துகொண்டு பரிசுகளை அள்ளுங்கள்.**

## காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு

உங்கள் வாழ்வில் அல்லது உங் களுக்குத் தெரிந்தவர்களின் வாழ்வில் காதல் பரிசுகள் பற்றிய சுவாரசியமான சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

தரமானவை வாரந் தோறும் இந்தப் பகுதியில் பிரசுரமாவதோடு, உங்களுக்கு ஆச்சரியமளிக்கும் பரிசுகளும் காத்திருக்கின்றன.



**அனுப்ப வேண்டிய முகவரி:**
**காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு**
**சுடர் ஒளி**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# முதல் பார்வையிலேயே காதல் வருமா...?

பார்த்தவுடன் காதல் பற்றிக் கொண்டதாக பலரும் கூறுகிறார்கள். இப்படி முதல்பார்வையிலேயே காதல் வந்துவிடுமா அப்படி வந்தால் அது காதல்தானா?

ஒருவரது தோற்றம்தான் நம்மை முதலில் ஈர்க் கும். ஏனெனில் நமது பார்வைக்கு முதலில் தோன்று வது அவரது உருவம்தான். அவரது அழகு, நடை, உடை, பாவனைகள் இவற்றைத்தான் நாம் முதலில் பார்க்கிறோம். அது பிடித்திருந்தால் பார்த்த மாத்திரத் திலேயே அவர் நம்மை ஈர்த்து விடுவார்.

அப்படி பிடித்து போய்விட்டால் உங்கள் பார்வை அவரைத் துரத்துவதுபோல ஆர்வத்தோடு பார்க்கும். குளுமை வீசி கவர்ந்திழுக்க முயற்சிக்கும். இந்த பார்வையை எதிர்கொள்ளும் ஆணோ, பெண்ணோ யாராக இருந்தாலும் அவர்களுக்குள்ளும் உங்கள் மீதான ஈர்ப்பு எழுவதும் இயல்பே. அதை அவர் எடுத்துக் கொள்ளும் விதத்தில்தான் உங்களது காதல் அரும்பு வதும், கருகுவதும் இருக்கிறது.



பார்வையில் பலவிதம் இருக்கிறது. நீங்கள் பார்க்கும் பார்வைக்கும், அவர் பார்க்கும் பார்வைக்கும் பொருள் என்ன என்பதை புரிந்து கொள் வதில் தான் காதலின் வெற்றி இருக்கிறது. ஒருவரை மீண்டும் மீண்டும் ஆவலோடு பார்க் கிறோம் என்றால் அது காதல், காமம், அன்பு எதுவாகவும் இருக்கலாம்.

முதல் பார்வையில் உங்களுக்குள் ஆர்வம் வந்துவிட்டாலும் அது காதலா, இல்லையா என்பதை அறிய சில காலம் பிடிக்கும். காதலில் நேரத்தை பற்றி சிந்திக்க வேண்டியதில்லை. தொடர்ந்து காட்டும் நேச பார்வையும், அன்புப் புன்னகையும், கனிவான நடவடிக்கைகளும் நீங்கள் விரும்புபவ ருக்கு உங்கள் மீது காதலை மலரச் செய்யும் என்பதில் சந்தேகம் இல்லை.

இப்படி பார்வையில் பல நாட்கள் கடந் தாலும் சிலருக்கு 'காதல் இதுதானா? நாம் காதலில் விழுந்துவிட்டோமா?' என்பது தெரிவ தில்லை. அதைக் கண்டுபிடிக்கவும் வழி உண்டு.

உங்கள் நடவடிக்கையில் முன்பைவிட மாற் றம் ஏற்பட்டிருப்பதாக உணர முடிகிறதா? ஒரு செயலைச் செய்யும்போது அம்மா, அப்பா உட்பட அருகில் இருப்பவர்கள் தலையில் தட்டி 'உனக்கு என்ன நடந்து விட்டது? ஒழுங்காக வேலையைப் பார்' என்று சொல்லித் தெரியவேண்டிய அளவில் உங்கள் கவ னம் சிதறுகிறதா? அப்படியானால் அந்த நேரத்தில் உங்கள் சிந்தனையை யார் ஆக்கிரமித்திருக்கிறாரோ அவர் மீது உங்களுக்கு விருப்பம் வந்துவிட்டது என்று பொருள். அவரது பார்வைதான் உங்களுக்குள் இந்த மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதும் உண்மை. காதல் தவறென்றும், அதை ஒரு பலவீனமான எண்ணமாக கருதுபவர் களும் உண்டு. அவர்கள் பெற்றோரின் தீவிர கண்காணிப் பில் வளர்ந்தவர்களாகவும், பாச உணர்ச்சி அதிகம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

மிகுந்த பாசம் காட்டி வளர்க்கப்படுபவர் களே எளிதில் காதலில் விழுவார் கள் என்பார் உளவியலின் தந்தை சிக்மன் புரெய்ட். இப்படிபட்டவர்கள் தான் முதல் பார்வையில் தங்களுக்குள் காதலை அரும்ப விட்டுவிட்டு, அப்பா கண்டிப்பாரோ, எதிர்ப்புகளை சந்திக்க வேண்டி இருக்குமோ, காதலிப்போமா, வேண்டாமா? என்று குழம்பிக் கொண்டிருப்பார்கள்.

இவர்களுக்கு தன்னை விரும்புபவர் பார்க்கும்போது சந்தோஷமாக இருந்தாலும், கண்டும் காணாமலும் இருக்க முயல்வார்கள். அவர் தன் அருகில் இருந்து நீங்கியதும் அவரைத் தேடி விழிகளை அலைபாய விடுவார்கள். தங்களுக்குள் தாமே 'கண்ணாமூச்சி' ஆடிக்கொள்வதுபோல் இருக்கும், இவர்களது நினைப்பும், நடத்தையும்

எது, எப்படியோ முதல் பார்வையில் காதலில் விழுந்தவர்கள் ஏராளம். அது சரியா? தவறா? என்பது அவர்களுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். மற்றவர்களுக்கோ சரியென்றால் சரி, இல்லையென்றால் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Australian Government

# வீசா இல்லாமல் படகு மூலம்

# அவுஸ்திரேலியாவுக்கு வரும்

# எவருமே அங்கு குடியமர முடியாது



2013 ஜூலை 19 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் புதிய சட்டத்திற்கு அமைய,

- வீசா இல்லாமல் படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு வருகை தரும் சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் பப்புவா நியூகினிக்கு அனுப்பி வைக்கப்படுவர்.
- நீங்கள் அகதிகளாக அடையாளம் காணப்பட்டாலும், இப்போது பப்புவா நியூகினியிலேயே குடியமர்த்தப்படுவீர்கள். அகதிகள் அல்லாத குடியேற்றக்காரர்கள் தமது சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படுவார்கள்.
- இப்போதும் அதிகமான இலங்கையர்கள் மீண்டும் தாய்நாட்டிற்கு
- ஆட்கடத்தல்காரர்களின் பொய் வாக்குறுதிகளுக்கு ஏமாற வேண்டாம். நீங்கள் பணம் செலுத்துவது அவுஸ்திரேலியாவுக்கான பயணச் சீட்டுக்கு அல்ல.

அவுஸ்திரேலியாவுக்கு
படகில் போக வேண்டாம்

அவுஸ்திரேலிய அரசாங்கம் விடுக்கும் செய்தி. மேலதிக விபரங்களுக்கு www.australia.gov.au/novisa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிப்பிடி... கட்டிப்பிடிடா



சிம்புவும், தானும் கட்டிப்பிடித்தபடியான புகைப்படத்தை தமது 'பேஸ்புக்' பக்கத்தில் பதிவு செய்திருக்கிறார் நடிகை ஹன்சிகா.தமிழ்த் திரையுலகின் புதிய காதல் ஜோடியாக சிம்பு-ஹன்சிகா ஆகிய இருவரும் வலம் வருகின்றனர்.

சில நாள்களுக்கு முன்பு ஹன்சிகாவின் பிறந்த நாளுக்கு என்ன பரிசுப் பொருள் வழங்குவது என்பதில் மண்டையை உடைத்துக் கொண்டிருக்கிறேன் என்று சிம்பு டுவிட்டரில் பதிவிட்டிருந்தார்.பின்பு ஹன்சிகாவின் பிறந்த நாளன்றும் 'இளவரசி' என்றெல்லாம் வர்ணித்திருந்தார் சிம்பு. இந்த நிலையில் விருந்து ஒன்றில் சிம்புவும் தானும் கட்டிப் பிடித்தபடி இருக்கும் வெளியாகி இருக்கின்றன. புகைப்படத்தை தமது பேஸ்புக் பக்கத்தில் பதிவேற்றியுள்ளார் ஹன்சிகா. மேலும் அந்த விருந்தில் எடுக்கப்பட்ட வேறு சில படங்களும் சமூக வலைத்தளங்களில் வெளியாகி இருக்கின்றன.


**அதிகாரமளிக்கப்படாத நிறுவனங்களில் முதலிட்டு இலவு காத்த கிளி போல ஏமாறாதீர்கள்!**



**உண்மைக்குப் புறம்பாக வருமானத்தை வழங்குவதன் மூலம் பொதுமக்களை தவறாக வழிநடத்துகின்ற பல்வேறு கபடத்தனம் மிக்க திட்டங்களை மீண்டும் அவதானிக்க முடிகிறது. கடந்த காலங்களில் அத்தகைய திட்டங்களில் முதலீடு செய்ததன் மூலம் மக்கள் கடின உழைப்பில் கிடைத்த பணத்தை அவர்கள் இழந்திருக்கிறார்கள்.**

பின்வருவனவற்றை அவதானிப்பதன் மூலம் அத்தகைய திட்டங்களை நீங்கள் அடையாளம் கண்டுகொள்ள உதவும்

- ஒரு தடவை செய்யப்பட்ட கொடுப்பனவின்மீது தொடர்ச்சியாக வருமானத்தை வழங்குதல்
- நம்பமுடியாதளவிற்கு வருமானம்
- வாராந்த/மாதாந்த அடிப்படையில் உண்மைக்குப் புறம்பான வருமானக் கொடுப்பனவுகள்
- முதலீடு தொடர்பான இடர்நேர்வு மிகக் குறைவானது என நம்ப வைத்தல்
- ஓர் பதிவு செய்யப்பட்ட நிறுவனமென பாசாங்கு செய்தல்
- நிறுவனமானது மத்திய வங்கி போன்ற ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்பொன்றின் கீழ் தொழிற்படுவதாக பாசாங்கு செய்தல்

ஆகவே, எந்தவொரு முதலீட்டினையும் மேற்கொள்வதற்கு முன்னர் தயவுசெய்து பின்வருவனவற்றை தெரிந்து கொள்ளுங்கள்:

- முதலீட்டின் பாதுகாப்பு மற்றும் நீண்ட காலம் நிலைத்திருக்கக்கூடிய தன்மை
- வருமானம் உண்மையானதா என்பதனை உறுதிப்படுத்துங்கள்
- முதலீட்டின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள்
- ஆவணங்களின் துல்லியமானதும் பூரணத்துவம் வாய்ந்ததுமான தன்மை
- தொடர்பான சட்ட ஏற்பாடுகள்
- இது ஓர் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட திட்டமா என்பதனை உறுதிப்படுத்துங்கள்
- இவ்வியாபாரத்தின் உறுதிப்பாடு மற்றும் எதிர்கால நீடித்த தன்மை

**அளவுக்கு விஞ்சிய வருமானங்களுக்கு பின்னால் ஓடுவதன் மூலம் கடின உழைப்பில் கிடைத்த பணத்தை விரயம் செய்துவிடாதீர்.**

அத்தகைய திட்டங்களில் முதலீடு செய்வதன் மூலம் ஏற்படும் இடர்ப்பாடுகளுக்கு நீங்களே பொறுப்பாவீர்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

விசாரணைகள் - வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் - 011 2477500



O/L மாணவர்களே! உங்கள் வெற்றிக்கான கையேடு

இதோ! வெளிவந்துவிட்டது

STEP 13




எதிர்பார்க்கை வினாத்தாள்கள் உள்ளடங்கலாக

தமிழ்
ஆங்கிலம்
கணிதம்
விஞ்ஞானம்
வரலாறு
வர்த்தகம்
சிங்களம்
சித்திரம்
மாதிரி வினாத்தாள்

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 077 2374191, 011 5738855

வடமாகாணத் தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222



100% பரீட்சையை நோக்கி

புலமை 45




2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான புலமைச்சுடர் கையேடு எதிர்வரும் செப்டம்பர் 30 ஆம் திகதியிலிருந்து வெளிவர இருக்கின்றது.

இறுதி எதிர்பார்க்கை வினாத்தாள்கள் உள்ளடங்கலாக

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855

வடமாகாணத் தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப் பத்திரிகை கொழும்பு -17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2013 ஓகஸ்ட் 21 ஆம் திகதி வெளியிட்டது.